Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 14 (02.08.2004) திங்கட்கிழமை இதழ் :304

WESTERN UNION® பணப் பரிமாற்றம்
மூலம் உலகின் எப்பாகத்தில் இருந்தும் பணத்தை விரைவாக பெற்றுக்கொள்ள நல்லூரில்...
சாந்தி மல்ரி கோட்யாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

## இடைக்கால நிர்வாக சபையை கோருவதற்கு

# தமிழ் மக்களுக்குள்ள உரிமையை அங்கீகரிக்க ஐ.நாவிடம் கோரிக்கை!

### உப ஆணைக் குழுக் கூட்டத்தில் மகஜர் கையளிப்பு

(ஜெனிவா)

**சர்வதேச மனித உரிமைகளுக்கான சட்டங்கள் மற்றும் உடன்பாடுகளுக்கு அமை
வாக் தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் பயன்படுத்தவும் தமக்கான இடைக்கால
நிர்வாகத்தை உருவாக்கவும் உரிமை கொண்டவர்கள் என்பதை ஐ.நா மனித உரிமை
கள் உப ஆணைக்குழு சிபார்சு செய்யவேண்டுமென ஜெனிவாவைத் தலைமையக
மாகக் கொண்ட அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கோரியுள்ளது.**

தற்போது நடைபெறும் ஐ.நா.
மனிதஉரிமைகள் பாதுகாப்புக்கும்,
மேம்பாட்டுக்குமான உப ஆணைக்
குழுவின் 56 ஆவது கூட்டத் தொடா
லேயே இது தொடர்பான மனு
ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவில் தமிழ்மக்களின்
இன்றைய வாழ்நிலை தொடர்பாக
தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இதில் தமிழ்மக்க
ளுக்கெதிரான பொருண்மிய சமூக
மற்றும் பண்பாட்டு உரிமை மீறல்
கள் விபரிக்கப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம், உட்கட்ட
மைப்பு மற்றும் பொருளாதார வாழ்
வில் தமிழ்மக்கள் எதுவித முன்
னேற்றங்களுமின்றி தொடர்ந்து துன்
பங்களையும் புறக்கணிப்புக்களை
யும் அனுபவிப்பதை இம்மனுவில்
கோடிட்டு காட்டியுள்ளது குறிப்பிடத்
தக்கது.

அத்துடன், இடம்பெயர்ந்த மக்
களின் பிரச்சினை மற்றும் உயர்
பாதுகாப்பு வலயம் என்பன எவ்
வாறு தமிழ்மக்களின் பொருண்மிய
சமூக பண்பாட்டு உரிமைகளை மீறு
கின்றது எனபனவும் சுட்டிக்காடடப்
பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் போரால்
மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட
தமிழ் மக்கள், உலகளாவிய பொருண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகம் முன்பாக

# எச்.என்.டி.ஏ. பட்டதாரிகள் உண்ணாவிரத முஸ்தீபு!

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி நியமனத்தில் உயர்
தேசியக் கணக்கியல், முகாமைத்
துவ, நிதியியல் பட்டம் பெற்றோர்
புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்து,
உயர் தேசிய கணக்கியல் முகா
மைத்துவ பட்டதாரிகள் சங்கத்தின்
ஏற்பாட்டில் - யாழ். செயலகம் முன்
அடையாள உண்ணாவிரதப் போராட்
டம் ஒன்றை இன்று காலை நடத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்துக்கு தகவல் வழங்கியதால் புளொட் மோகன் கொல்லப்பட்டிருக்கலாம்!

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் நேற்று முன்
தினம் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட
மோகனுக்கும், இராணுவத்துக்கும்
எந்தத் தொடர்பும் இல்லை என்று,
நேற்று முன்தினம் மறுப்புத் தெரி
வித்த இராணுவப் பேச்சாளர் கேணல்
சுமேத பெரேரா -

புளொட் மோகன் இராணுவத்
துக்கு அவ்வப்போது தகவல் வழங்கி
வந்தவர் என்பதை நேற்று ஒப்புக்
கொண்டார்.

இது குறித்து அவர் மேலும் தக
வல் தெரிவிக்கையில் -

பம்பலப்பிட்டியில் சுட்டுக்கொல்
லப்பட்ட புளொட் மோகன் இராணு
வப் புலனாய்வுப் பிரிவில் கடமை
யாற்றிவர் அல்ல,

எனினும், இராணுவப் புலனாய்
வுப் பிரிவினருக்கு அவ்வப்போது
தகவல்களை வழங்கிவந்த ஒற்ற
னாகச் செயற்பட்டு வந்தார்.

ஒற்றன் என்ற வகையில் தமது
கடமைகளை நிறைவேற்றியதன்
காரணமாகவே புளொட் மோகன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புளொட் மோகன் கொலைக்கு கூட இருந்தவரே உடந்தை!

### பொலிஸ் விசாரணைகளில் தகவல்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி டுப்ளிகேசன் வீதி
யில் வைத்து நேற்றுமுன்தினம்
புளொட் மோகன் சுட்டுக்கொல்லப்
பட்ட சம்பவத்துக்கு, அவருடன்
நீண்டகாலமாக கூட இருந்து ஒன்
றாகச் சென்றவரே துணையாக இருந
ததாக ஆரம்பக்கட்ட விசாரணை
களிலிருந்து தெரியவருவதாக பொலி
ஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸார் மேலும
தகவல் வெளியிடுகையில் -

மட்டக்களப்பைச் சேர்ந்த புளொட்
மோகன், கொழும்பில் தங்கியிருந்த
தனியார் விடுதியின் உரிமையாளர்
மற்றும் விடுதியில் தங்கியிருந்தோ
ரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்
டுள்ளனர்.

புளொட் மோகனின் மனைவி,
அவர் சுடப்பட்டபோது - பயணம்
செய்த ஓட்டோவின் சாரதி உட்ப
டப் பலரின் வாக்குமூலங்கள் பெறப்
பட்டுள்ளன எனவும் பொலிஸார்
தெரிவித்தனர்.

# இராணுவக் கட்டளைப் பீடத்தில் மாற்றம்; யாழ்.தளபதியாக சுனில் தென்னக்கோன்!



(கொழும்பு)

யாழ்.குடாநாட்டுக்கான இரா
ணுவக்கட்டளைத் தளபதி
யாக இருக்கும் மேஜர் ஜென
ரல் சுசில் சந்திரபால கொமாண்
டர் படைகளின் தளபதி
யாக நியமிக்கப்பட்
டுள்ள அதேவேளை,
குடாநாட்டுக்கான
கட்டளை அதிகாரி
யாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நியமிக்
கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு
வரும் வகையில் இராணுவக்கட்டமைப்பில் இடம்
பெற்றுள்ள இந்தப் பாரிய மாற்றங்களின் அடிப்படையி
லேயே குடாநாட்டு படைத்தலைமையிலும் மாற்றங்கள்
செய்யப்பட்டுள்ளன.

லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட கடந்தமாதம்
இராணுவத்தளபதியாக பதவியேற்ற பின்னர் இராணு
வக்கட்டளைப்பீடத்தில் செய்துள்ள முதலாவது மாற்
றம் இதுவாகும்.

தொண்டர் படைகளின் தளபதியாக மேஜர் ஜென
ரல் சுசில் சந்திரபால பதவியேற்கவுள்ளார். தொண்டர்
படைத்தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சரத்
பொன்சேகா இராணுவ பிரதித்தலைமை அதிகாரியாக
தொடர்ந்தும் பதவிவகிப்பார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட இருந்தவரே உடந்தை!

## பொலிஸ் விசாரணைகளில் தகவல்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி டுப்ளிகேசன் வீதியில் வைத்து நேற்றுமுன்தினம் புளொட் மோகன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு, அவருடன் நீண்டகாலமாக கூட இருந்து ஒன்றாகச் சென்றவரே துணையாக இருநததாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து பொலிஸார் மேலும தகவல் வெளியிடுகையில் -

மட்டக்களப்பைச் சேர்ந்த புளொட் மோகன், கொழும்பில் தங்கியிருந்த தனியார் விடுதியின் உரிமையாளர் மற்றும் விடுதியில் தங்கியிருந்தோரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

புளொட் மோகனின் மனைவி, அவர் சுடப்பட்டபோது - பயணம் செய்த ஓட்டோவின் சாரதி உட்பட்ப் பலரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்.தளபதியாக சுனில் தென்னக்கோன்!



(கொழும்பு)

யாழ்.குடாநாட்டுக்கான இராணுவக்கட்டளைத் தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால கொமாண்டர் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, குடாநாட்டுக்கான கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இராணுவக்கட்டமைப்பில் இடம் பெற்றுள்ள இந்தப் பாரிய மாற்றங்களின் அடிப்படையிலேயே குடாநாட்டு படைத்தலைமையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட கடந்தமாதம் இராணுவத்தளபதியாக பதவியேற்ற பின்னர் இராணுவக்கட்டளைப்பீடத்தில் செய்துள்ள முதலாவது மாற்றம் இதுவாகும்.

தொண்டர் படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால பதவியேற்கவுள்ளார். தொண்டர் படைத்தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவ பிரதித்தலைமை அதிகாரியாக தொடர்ந்தும் பதவிவகிப்பார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வட.கிழக்கு மனித உரிமை செயலகத்தில்

# இரண்டாவது அமர்வு நேற்று நடைபெற்றது!



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு - கிழக்குக்கான மனித உரிமைச் செயலகத்தின் இரண்டாவது கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் அதன் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக்கூட்டத்தினை வண. பிதா எம்.எக்ஸ்.கருணாரட்ணம் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் -

இந்தச் செயலகம் திறக்கப்பட்டதன் பின்னர் இதுவரை 13 முறைப்பாடுகள் வடக்கு - கிழக்கிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. இதில், ஐந்து முறைப்பாடுகள் தீர்த்து வைககப்பட்டன.

அத்துடன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகிய இருவரும் சந்தித்து இந்தச் செயலகத்துக்கு தாம் எவ்வாறு உதவலாம் என கலந்துரையாடினர். இதில், தம்மிடம் உள்ள சிறைக்கைதிகளை விசாரிப்பதற்கும், ஒழுங்கு செய்து தருவதாக இந்தக் கலந்துரையாடலில் பா.நடேசன் தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவர் மற்றும் செயலாளர், பொருளாளர் என்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இரு இராணுவப் புலனாய்வாளர்கள் மட்டக்களப்பில் புலிகளால் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து - துப்பாக்கியுடன் இரண்டு இராணுவப் புலனாய்வுத் துறையினர் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்துக்கு அருகில் உள்ள பெரியபுல்லுமலை என்ற இடத்தில் வைத்தே ஆறுமுகம் ரவிச்சந்திரன் மற்றும் செல்லத்துரை சந்திரசேகரம் ஆகிய இரண்டு புலனாய்வுத்துறையினரும் இரண்டு ரி-56 ரகத் துப்பாக்கிகள் மற்றும் செல்போனுடனும் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுத் தொடர்பாக

# சர்வதேச அரசியல் நிபுணர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா சர்வதேச மனித உரிமைகள் மற்றும் அரசியல் நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கென சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள், சமாதானச் செயற்பாடுகளில் ஆற்றல் உள்ள நிபுணர்கள் அடங்கிய குழுவினர் இலங்கை வந்துள்ளனர். இவர்களில் டேவிட் பெட்ரோசெத், அலன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
ema l: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# நெடுந்தீவு தபால் நிலையக் கட்டடத்திலிருந்து கடற்படையினரை வெளியேற்ற நடவடிக்கை!

## கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்படையினர் வசமாயிருக்கும் நெடுந்தீவு தபால் நிலையத்தினை விடுவிப்பதற்கு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் நடவடிக்கை எடுத்து வருவதாக யாழ்.மாவட்டக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

தபாலகத்தின் கட்டடத்தில் படையினர் முட்கம்பி வேலிகளைப் பாவித்து வருவது குறித்து, அந்த இடத்தை கடற்படையினரிடமிருந்து விடுவிக்குமாறு அந்தப் பகுதி மக்களும், பொது அமைப்புக்களும் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து, கண்காணிப்புக் குழுவினர் படையினரிடமிருந்து தபால்நிலைய கட்டடத்தை விடுவிப்பது குறித்துப் பேச்சுக்களை நடத்திவருகின்றனர்.

இந்த முகாம் பற்றிய மக்களின் கருத்துக்களை கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப் பிரதிநிதிகள் பார்வையிட்டதுடன், தபாலக கட்டடத்தையும் பார்வையிட்டனர். தபாலகத்தில் அமைக்கப்பட்ட முகாம் தொடர்பாக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என, அங்கு சென்றிருந்த அதிகாரிகளிடம் பொதுமக்கள் கேட்டபோது, தாம் நெடுந்தீவினையும், அதன் ஒவ்வொரு நிகழ்வுகளையும் தொடர்ந்து அவதானித்து வருவதாகவும், தபாலகத்தில் அமைந்துள்ள முகாம் தொடர்பாக உரியவர்களிடம் தகவல் எடுப்பதாகவும், அது தொடர்பாகவே இன்றும் வந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஏற்கனவே, முட்கம்பி வேலிகளால் மூடி அடைக்கப்பட்ட தபாலகத்தின் ஒரு பகுதி அறையினை விடுவிப்பது தொடர்பாகவும் நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். (113)

# உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுடன் அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

(யாழ்ப்பணம்)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களை கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாகாண நிதி மற்றும் அபிவிருத்தி, உள்ளூராட்சி வார நிகழ்வுகள் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.து.விஜயலட்சுமி கலந்துகொள்ளவுள்ளார் என, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தெரிவிததார்.

# போக்குவரத்து தொடர்பாக செயலகத்தில் கலந்துரையாடல்

(நெடுந்தீவு)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள செயற்பாடுகள் தொடர்பான பயிற்சியும், கலந்துரையாடலும் எதிர்வரும் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் போன்றவற்றில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தொடர்பான கடமைகளைத் திறம்பட மேற்கொள்ளும் வகையிலேயே இந்தப் பயிற்சி வகுப்பு இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலகங்களில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள கடமையினை மேற்கொள்ளும் அலுவலர்கள் உட்பட குறைந்தது இரு அலுவலர்களை இதில் கலந்துகொள்ளுமாறு - யாழ்.மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கடிதம் மூலம் சகல செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது. (113)

# ஆண்டு நிறைவுவிழாவும் பரிசளிப்பு வைபவமும்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கல்வி வளர்ச்சிக் கழகத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 6.00 மணிக்கு காந்தி சனசமூக நிலைய வெள்ளிவிழா அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தின் தலைவர் ப.சசிகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை, நல்லூர் ஆனந்த வித்தியாலய அதிபர் வி.சிவராசா, அரியாலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தலைவர் க.சந்திரராசா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை சிரேஷ்ட ஆசிரியர் ரி.துஷ்யந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.

# உருவப்படம் திரைநீக்கமும் சின்னஞ்சூட்டு விழாவும்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மாணவத் தலைவர், தலைவியருக்கான சின்னஞ்சூட்டு விழா மற்றும் காலஞ்சென்ற முன்னாள் அதிபர்களின் உருவப்பட திரைநீக்க விழா என்பன இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முன்னாள் அதிபர்களான அமரர் சி.வேலுப்பிள்ளை, அமரர் நா.சங்கரப்பிள்ளை ஆகியோரின் திருவுருவப் படங்களே அன்றையதினம் வித்தியாலயத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது. (113)

# ஒலிபெருக்கி பாவித்தமைக்கு பொலிஸார் ஆட்சேபனை!

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் மாலை நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் பிரதேச முன்பள்ளி சிறார்களுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை போராளி என்.அசோகன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினையும், முன்பள்ளி மேம்பாட்டு நிலைய கொடியினையும் யாழ்.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டுத் தலைவர் ஏற்றிவைக்க சிறார்களின் வரவேற்புரையுடன் போட்டிகள் கோலாகலமாக ஆரம்பமாகின.

நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை, நெடுந்தீவு பிரதேச பொலிஸார் சிவில் உடையில் வந்து விழாக் குழுத் தலைவரைத் தனியாக அழைத்துச்சென்று அனுமதியின்றி ஒலிபெருக்கி பாவித்தமைக்கு பெரும் ஆட்சேபம் தெரிவித்து, தொடர்ந்து ஒலிபெருக்கியைப் பாவிக்கத் தடை விதித்ததுடன், தமிழீழ தேசியக் கொடியை ஏற்றியதற்கும் கடும் ஆட்சேபம் தெரிவித்துச் சென்றனர்.

இதன்பின்னர், இடம்பெற்ற நிகழ்வுகள் அனைத்தும் ஒலிபெருக்கி இன்றி மிகவும் சிறப்பான முறையில் எந்தவித தடையுமின்றி மாலை 6.30 மணிக்கு பரிசளிப்பு வைபவத்துடன் நிறைவடைந்தது.

சிறுவர்களின் இந்த நிகழ்விலும் பொலிஸார் தமது இன ஒடுக்கச் செயற்பாட்டைக் கட்டவிழ்த்துவிட்டமை, பெற்றோர்கள் மற்றும் பார்வையாளர்கள் மத்தியில் பெரும் விசனத்தினை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# பட்டதாரிகள் ஆட்சேர்ப்பில் முறைகேடு; கண்டித்து யாழ். செயலகம் முன் மறியல்

வேலையற்ற பட்டதாரிகளை அரச துறைகளில் வேலைவாய்ப்புக்காக ஆட்சேர்ப்பதில் தவறுகள் இடம்பெற்றிருப்பதாகச் சுட்டிக்காட்டி - யாழ். செயலகம் முன் இன்று மறியற் போராட்டமொன்றை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நடத்தவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு பட்டம்பெற்ற மூப்பு அடிப்படையில் நியமனங்களை வழங்குமாறு தெரிவித்தே இந்த மறியற்போராட்டம் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 7 மணியளவில் இந்த மறியற்போராட்டம் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறும்,

இங்கு பட்டம் பெற்ற மூப்பு அடிப்படையிலான பதிவுகள் மெற்கொள்ளப்படவிருப்பதாகவும் யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ராசாவின்தோட்டப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பெண்களில் ஒருவரைப் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றது. சம்பவத்தின்போது, குடும்பப்பெண் ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ராசாவின்தோட்டப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் சிலர் ஈடுபடுகின்றனர் என பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, அங்கு விரைந்த பொலிஸார் 3 போத்தல் வடிக்கப்பட்ட கசிப்பு, கசிப்பு உற்பத்திப்பொருட்கள் என்பவற்றைக் கைப்பற்றினர்.

இந்தக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்திலேயே இந்தப் பெண் யாழ்.பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இவருடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மற்றுமொரு பெண்ணைப் பொலிஸார் தேடிவருவதாகவும் தெரியவருகிறது. (தீ)

### பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி, தற்போது உள்ளகப் பயிற்சிபெறும் முகிழ்நிலை ஆசிரியர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சை முடிவுகளை கல்லூரியின் விளம்பரப் பலகையில் பார்வையிட முடியுமென கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

### திருநாள் திருப்பலி

நெடுந்தீவு மேற்கு புனித லோறன்ஸியார் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 9 ஆம் திகதி மாலை நற்கருணை எழுந்தேற்றமும், மறுநாள் 10 ஆம் திகதி காலை இறுதி நாள் திருப்பலியும், திருச்சொரூப பவனியும், கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (113)

### நேயர் மன்றம் அங்குரார்ப்பணம

வெரித்தாஸ் வானொலி நேயர் மன்ற அங்குரார்ப்பண நிகழ்வு, பாதுகாவலன் கேட்போர்கூட மண்டபத்தில் அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.வெரித்தாஸ் நேயர் மன்றத்தின் தலைவராக தனதீசனும், உபதலைவராக மயூரனும், செயலாளராக சயந்தியும், பொருளாளராக யேசுதாசனும் தெரிவுசெய்யப்பட்டதுடன், ஐந்து பேரைக்கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (91)

# பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வுகளும்

மானிப்பாய் பிரதேசசபையின் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வுகளும் இன்று மாலை 2 மணிக்கு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி வாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்கலும், முன்பள்ளி சிறுவர்களின் கலை நிகழ்வுகளுடன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு, வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (91)

## சந்தேகத்திற்கிடமான முறையில்

# பதுங்கி இருந்த இளைஞனை பொதுமக்கள் மடக்கிப்பிடித்தனர்

யாழ்.சிறைச்சாலைக்கு அண்மையாக உள்ள வீடொன்றில் திருடுவதற்காகப் பதுங்கி இருந்தார் என்ற சந்தேகத்தின்பேரில், இளைஞர் ஒருவரை அந்தப் பகுதி மக்கள் மடக்கிப்பிடித்து யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தின்போது யாழ்.நகரப் பகுதியைச் சேர்ந்த சிவா என்ற நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, மேலும் தெரியவருவதாவது -

யாழ். சிறைச்சாலைக்கு அண்மையாகவுள்ள வீடொன்றின் முன் நபர் ஒருவர் பதுங்கி இருந்ததாகவும், அவர் அங்கு பதுங்கியிருக்கையில் சில நபர்கள் வந்து விசாரித்துச் சென்றதாகவும், இதனால் அந்தப் பகுதியில் நின்ற பொதுமக்கள் இவரை விசாரிக்க முற்பட்ட போது மேற்படி நபர் ஓட முற்பட்டுள்ளார்.

ஓடமுற்பட்ட நபரைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் கையில் காயமடைந்த காரணத்தினால், பொலிஸார் இருவரின் பாதுகாப்புடன் யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்றுவருகிறார். (தீ)

## கரவெட்டிப் பிரதேச வீரமுரசு நிகழ்வு

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்த வீரமுரசு நிகழ்வு அண்மையில் ஸ்ரீ நாரதா கல்லூரி மைதானத்தில் தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினரான ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

இரண்டாம் லெப்டினன்ட் உலகப்பன், வீரவேங்கை உலகநாயகி ஆகியோரின் தந்தையான சீனியன் வேலன் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார். (13)


நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜூனியர் சிவாஜி துஷ்யந்தன், சுபா, பூஜா நடித்த
குஞ்சி
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) saving private Ryan
(சீ-2723)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்றுமுதல்
ரஜினிகாந்த், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
பாட்ஷா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
அர்ஜுன், மீனா, நெப்போலியன், மணிவண்ணன் நடித்த
அன்புசகோதரன்

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சீ-2725)

### அரச ஊழியர் சம்பள உயர்வு!

# ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த எழுதுவினைஞர் சங்கம் முடிவு

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புத் தொடர்பாக எதிர்வரும் ஆறாம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக, அனைத்திலங்கை எழுதுவினைஞர் சேவைச் சங்கத் தலைவர் பி.கே.பியதாச தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சம்பள உயர்வை வழங்கும்வரை அரச ஊழியர்களுக்கு மூவாயிரம் ரூபாவை விசேட கொடுப்பனவாக வழங்குவதற்கு இந்த மாத முடிவிற்குள் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிடில், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடு வதற்கு அரசசார்புத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

ரூபா மூவாயிரம் கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக ஜனாதிபதிக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே இறுதித் தீர்மானம் குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறும்.

ஜனாதிபதியுடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின்போது, மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக முடிவெடுக்கப்படுமென தொழிற்சங்கம் நம்புகின்றது. அவ்வாறு வழங்காதுவிடினும் கூட அனைத்து இலங்கை எழுதுவினைஞர் சேவை ஊழியர்களும் தொழிற்சங்க செயற்பாடுகளில் ஈடுபட நேரிடும்.

'கடந்த பலமாதங்களாக வர்த்தக சந்தையில், பெற்றோல், அரிசி, உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் பெருமளவில் உயர்ந்து சென்றதனால், அரச சேவை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லை. இதனால், அவர்கள் பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளனர்.

இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு, வரவு செலவுத் திட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்கும்வரை அவர்களால் காத்திருக்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## இராணுவ ஆட்சேர்ப்பு இன்று முதல் ஆரம்பம்!

இலங்கை இராணுவ நான்காவது சைகைப் படைப்பிரிவினருக்கு பயிலுனர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத்தேர்வு இன்று தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத்தேர்வு அனைத்து நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணிவரை கண்டி பூவலிகட இராணுவ முகாமில் இடம்பெறவுள்ளது.

இந்தப் படைப்பிரிவிற்கு, தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, சாரதி, எழுதுவினைஞர் போன்ற பதவிகளுக்கு பயிலுனர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதுடன், இவர்களது பதவிநிலைகளுக்கேற்ப உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில், மூன்று பாடங்களில் சித்தியடைந்த, 18 தொடக்கம் 25 வயதுக்கிடைப்பட்ட 5' 4" உயரமுள்ள திருமணமாகாத இளைஞர்கள் நேர்முகத் தேர்வுக்கு தோற்றமுடியுமெனவும், விளையாட்டுத் திறமைகள் இருப்பின் அது மேலதிக தகைமையாகக் கருதப்படுமெனவும் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## வட கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு ஒக்ரோபர் 23இல் தேர்தல் நடக்குமாம்!

(யாழ்ப்பாணம்)

மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைக்கான தேர்தல்களை ஒக்ரோபர் 23ஆம் திகதி நடத்துவதற்கு, அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்துவிட்டதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதன்படி வடக்கு - கிழக்கில் 6 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உள்ள 60 உள்ளூராட்சி சபைகளுக்கு 690 பேர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

## சந்திரசேகரன் சென்னையில் கருணாநிதியுடன் சந்திப்பு

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் கடந்த வெள்ளிக்கிழமை தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தற்போதைய நிலைமைகளை சந்திரசேகரன் கருணாநிதிக்கு எடுத்து விளக்கினார்.

அத்துடன், சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைய இந்தியாவின் ஒத்துழைப்பின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வின் போது, அதில் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழி மலையக மக்களின் பிரச்சினைக்கும் தீர்வுகாணப்படவேண்டிய அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

இந்தக் கருத்துக்களைச் செவிமடுத்த திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதி இந்த விடயங்களை புதுடெல்கியின் நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக அவர் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதானத்துக்கு எதிராகவே அரசாங்கத்தின் செயற்பாடுகள்

### இளம்பரிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சமாதான சூழலை தக்கவைத்துக்கொள்ள ஜனாதிபதி முயன்று வருகின்றார். எனினும், அவரின் செயற்பாடுகள் யாவும் சமாதானத்துக்கு எதிராக இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நெல்லியடி பொது மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்டத் தேசிய எழுச்சிப் பெருவிழாவில் பங்கு பற்றிப் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற வேளையில் - இரண்டு தரப்பும் இராணுவரீதியில் சமநிலையில் இருந்தன. ஆனால், இன்று அந்தச் சமநிலையை இராணுவத்துக்கு வலுவூட்டுவதன் மூலம் ஜனாதிபதி மாற்ற முனைகிறார்.

கருணாவைப் பயன்படுத்தி தமிழ்த் தேசியத்தை உடைக்க முயன்ற அவருக்கு இறுதியில் தோல்வியே கிடைத்துள்ளது. இந்த நிலையில் போர் ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்குமானால், அதில் அரசாங்கம் தோல்வியைத்தழுவும்.

இலங்கையில் சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள் அவர்கள் சார்ந்த சமூகத்துக்குச் செயலாற்றவில்லை என்றும் இளம்பரிதி மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கை அமைதி முயற்சிகள்; நோர்வேயில் விசேட மாநாடு!

### 20ஆம் திகதி நடைபெறும்

'இலங்கையில் அமைதிக்கான பாதை வரைபு' என்ற பெயரிலான மாநாடு ஒன்று எதிர்வரும் 20ஆம் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் அமைதிக்கான உலக இணையம் மற்றும் நோர்வேயின் ஆர்நிலையம் ஆகியன இணைந்து இந்த மாநாட்டை நடத்தவுள்ளனர்.

இலங்கை அமைதி முயற்சியில் நோர்வேயின் பங்கு பணிகள் தொடர்பாகவும், தற்போதைய நிலவரங்கள் தொடர்பாகவும் இந்த மாநாட்டில் கருத்துக்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்ம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் நோர்வே அலுவலகச் செயலாளர் பீற்றர் எடி ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் நோர்வேயின் தீவிரவாத முறியடிப்பு இயக்கத்தின் பிரதிநிதியான றொவிக் நோர்வே - நோர்வேயும், புலிகளும் என்ற தலைப்பில் - சமரச முயற்சிகளில் நோர்வேயின் முக்கியமான பங்களிப்புக் குறித்து உரையாற்றவுள்ளார்.

இந்தக் கருத்தமர்வில், நோர்வே வெளிவிவகார அலுவலக விசேட ஆலோசகரான லிசா கோல்டன் பேச்சாளராக கலந்துகொள்வார்.

முரண்பாட்டு நிலைதொடர்பான- பிரிட்டனைச் சேர்ந்த சர்வதேச ஆய்வாளரான போல் ஹரிஸ், வொஷிங்டனிலுள்ள அமெரிக்க விமானப்படை மற்றும் தேசிய பாதுகாப்பு பிரிவுகளின் கொள்கை ஆய்வாளரான கலாநிதி பீற்றர் ஷால்க், கனடாவின் நஷனல் போஸ்ட் பத்திரிகையின் பிரதம செய்தியாளர் ஸ்ரீவட் பெல், பேராதனைப் பல்கலைக்கழக புவியியற்துறைப் பேராசிரியர் சாந்தகே ஹேணநாயக்க, ஐ.நா. சிரேஷ்ட ஆலோசகரான கலாநிதி சுசந்த குணதிலக, சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், தற் போது அவுஸ்ரேலியாவில் வசிப்பவருமான எச்.எல்.டி. மகிந்தபால ஆகியோரும் கலந்கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில் புகைப்படக் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

## சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

பம்பலப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட புளொட் மோகன் என்று அழைக்கப்படும் கந்தையா யோகராசா குறித்துப் பலரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கொல்லப்பட்டவரின் மனைவி உட்பட மேலும் பலரிடம் வாக்குமூலம் பெறப்பட இருப்பதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் லுகொட தெரிவித்தார்.

உயிரிழந்த நபர் வந்ததாகக் கூறப்படும் ஒட்டோவின் சாரதி மற்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் ஆகியோரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றன.

உயிரிழந்த புளொட் மோகன் தமது அமைப்பின் நீண்டகால உறுப்பினர் என்று புளொட் அமைப்பினர் தெரிவித்தனர்.

1983ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரை புளொட் அமைப்பில் இவர் இணைந்து செயற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



தாய்லாந்தில் நடைபெற்ற தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றிய உச்சி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகாவும் - தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சின்வத்ராவும் கைலாகு கொடுக்கின்றனர்.

## பாதுகாப்புப் பிரிவின் உயர் பதவிகள் இரண்டு பாதுகாப்புச் செயலரிடம் ஒப்படைப்பு

அரசின் பாதுகாப்புப் பிரிவில் தற்போது நிலவும் இரண்டு வெற்றிடங்களையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைப்பதற்கு சந்திரிகா குமாரதுங்கா தீர்மானித்துள்ளார்.

பாதுகாப்புப் பிரிவின் ஒருங்கிணைந்த கட்டளையிடும் உத்தியோகத்தராக கடமையாற்றிய, முன்னாள் இராணுவத்தளபதி லயனல் பலகல்ல ஓய்வுபெற்றுச் சென்றதாலும், அரசின் இரகசிய உளவுச் சேவையின் ஆலோசகர் பதவியில் கடமை புரிந்த மெரில் குணவர்தனவின் சேவைக்காலம் அமைச்சரவையினால் நீடிக்கப்படாமையாலுமே இந்த இரண்டு வெற்றிடங்களும் ஏற்பட்டன.

எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் பாதுகாப்புச் சபையின் பார்வைக்கு அனுப்புவதற்கு முன்பு அதில் கூறப்பட்டவை அனைத்தையும் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியது மேற்குறிப்பிட்டப்பட்ட இரு பதவிகளிலும் உள்ளவர்களினது பொறுப்பாகும்.

எனவே, வெற்றிடமாக அந்தப் பதவியை நிரப்புவதற்கு, பொருத்தமான மூத்த அதிகாரிகள் இன்மையாலேயே தன்னை அந்தப் பதவிக்கு நியமித்ததாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் தெரிவித்தார். (தே)

### உல்லாசப் பயண அமைச்சுக்கு வழங்கிய

## கட்டடத்திலிருந்து வெளியேற அமைச்சர் டக்ளஸுக்கு உத்தரவு!

### கொழும்பு நீதிமன்றம் வழங்கியது

(கொழும்பு)

இந்து கலாசார அமைச்சு புதிதாகக் குடியேறியுள்ள கட்டடத் தொகுதியிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விலகிச் செல்ல வேண்டுமென கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் முன்னர் அமைந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்து சமய விவகார அமைச்சு, டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை முயற்சியை அடுத்து, உல்லாசப பயணத்துறை அமைச்சு அமைந்திருந்த கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.


அரசாங்கத்தால் தனியார் ஒருவரிடமிருந்து ஒன்பது மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத் தொகுதி வாடகைக்கு பெறப்பட்டதாகும்.

இந்த நிலையில், உல்லாசப் பயணத்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்ட கட்டடத் தொகுதியில், டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமைக்கு எதிராக கட்டட உரிமையாளரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதனையடுத்தே, குறித்த கட்டடத் தொகுதியிலிருந்து டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு விலகிச் செல்ல வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

# ஆசியக் கிண்ணத்தை இலங்கை கைப்பற்றியது!

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி - 2004



(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் - இந்திய அணியை 25 ஓட்டங்களால் வெற்றிகொண்ட இலங்கை அணி ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

குணவர்த்தனவும், ஜெயசூர்யாவும் இணைந்து ஆட்டத்தை ஆரம்பித்தனர். எனினும் ஜெயசூர்யா 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பதானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

சிறிது நேரத்தில் குணவர்த்தனவும் நெஹ்ராவின் பந்துவீச்சில் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து அத்தப்பத்து - சங்ககார ஜோடி அபாரமாக ஆடி இலங்கை அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தது.

இலங்கையணி 147 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 3 ஆவது விக்கெட் வீழ்ந்தது. சங்ககார 82 பந்துகளில் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை ஷேவாக் கைப்பற்றினார்.

இதையடுத்துக் களமிறங்கிய ஜெயவர்த்தன ஓட்டமெதையும் பெறாமல் டெண்டுல்கரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அணி 174 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது - அத்தப்பத்து ரன் அவுட்டாக நேர்ந்தது. இவர் 87 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 65 ஓட்டங்களைப் பெற்றார்.

டில்ஷான் ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்த போது - 22 ஓட்டங்ளைப் பெற்றிருந்த நிலையில் அவரது விக்கெட்டை டெண்டுல்கர் கைப்பற்றினார்.

இதன் பின்னர் வந்த சந்தன 8 ஓட்டங்கள், மஹ்ருப் 9 ஓட்டங்கள், வாஸ் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

சொய்சா 6 ஓட்டங்களுடனும், முரளிதரன் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலிருந்த போது - 50 ஓவர்கள் நிறைவடைந்த நிலையில் இலங்கை அணி 9 விக்கெட் இழப்புக்கு 228 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 32 உதிரி ஓட்டங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பதான், டெண்டுல்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், நெஹ்ரா, ஹர்பஜன், ஷேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து இந்திய அணி 229 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன்

விளையாட்டு

ஆட்டத்தை ஆரம்பித்தது.

இந்திய அணியின் தொடக்கவீரர் ஷேவாக் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். இவரது விக்கெட்டை வாஸ் கைப்பற்றினார்.


அடுத்து ஆடவந்த கங்கூலியும் 4 ஓட்டங்களுடன் சொய்சாவின் பந்துவீச்சுக்கு விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

இதையடுத்து லக்ஸ்மன் 12 ஓட்டங்களுடன் ஜெயசூர்யாவின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்தார்.

எனினும் மறுமுனையில் தொடர்ந்து நிலைத்து நின்று ஆடிக்கொண்டிருந்தார் டெண்டுல்கர். டெண்டுல்கருடன் ஜோடி சேர்ந்த ராவிட் 16 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார். இவரது விக்கெட்டை கைப்பற்றிய சந்தன, தொடர்ந்து வந்த யுவராஜ்சிங்கையும் 8 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பவைத்தார்.

நெருக்கடியில் இருந்த இந்திய அணியைத் தூக்கி நிறுத்துவர் என எதிர்பார்க்கப்பட்ட வீரர்கள் ஒவ்வொருவராக வீழ்ந்துகொண்டிருக்க களமிறங்கிய கை.்.ப், சந்தனவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்துசென்றார்.

இந்தநிலையில்தான் இந்திய அணிக்கு நம்பிக்கையூட்டக்கூடிய வீரராக இருந்த டெண்டுல்கர் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். இவர் 100 பந்துகளைச் சந்தித்து 7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்க





ளைப் பெற்றார்.

டெண்டுல்கரின் வீழ்ச்சிக்குப் பின்னர் வந்த பதான் 2 ஓட்டங்களோடு ஆட்டமிழந்துபோக ஹர்பஜன்சிங் களமிறங்கினார். இவர் 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஜெயசூர்யாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

எனினும் சகீர்கான் 24 பந்துகளில் 1 பவுண்டரி, 2 சிக்ஸர் என 29 ஓட்டங்களைக் குவித்தும், நெஹ்ரா 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

50 ஓவர் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் இந்திய அணி 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக அத்தப்பத்துவும், தொடர் நாயகனாக சனத் ஜெயசூர்யாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஜேர்மனி செஸ் போட்டி சமநிலையில்



ஜேர்மனி நாட்டில் உள்ள டார்ட்மென்ட் நகரில் முன்னணி வீரர்கள் பங்கேற்ற செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் இறுதிப் போட்டிக்கு இந்திய கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த், ரஷ்ய கிராண்ட் மாஸ்டர் கிராம்னிக் ஆகியோர் தகுதிபெற்றனர்.

இறுதிப்போட்டியின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்று, 60 ஆவது காய் நகர்த்தலுக்குப் பிறகு இந்த ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

## ஒலிம்பிக் கிராமம் திறந்துவைப்பு

உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை ஏதனசில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்கும் வீர வீராங்கனைகள் தங்குவதற்கான ஒலிம்பிக் கிராமம் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

90 கோடி ரூபா செலவில் இந்தக் கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது. 10500 வீர வீராங்கனைகள் மற்றும் 5 ஆயிரம் அதிகாரிகள் இந்தக் கிராமத்தில் தங்கலாம். இங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டு இருக்கிறது.

## அமெரிக்க ஓபன் கிளிஸ்டர்ஸ் விலகல்



கிராண்ட்ஸிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி நியூயோர்க்கில் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடஙகவுள்ளது. உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான கிம்கிளிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) காயம் காரணமாக இந்தப் போட்டியில் இருநது விலகியுள்ளார்.


ஏற்கனவே, அவர் பிரெஞ் ஓபன், விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகளில் காயத்தால் விளையாடவில்லை. காயத்திலிருந்து முழுமையாகக் குணமடையாததால் அமெரிக்க ஓபனிலும் அவர் ஆடவில்லை. மே மாதம் 5 ஆம் திகதியில் இருந்து இன்றுவரை கிளிஸ்டர்ஸ் எந்தப் போட்டியிலும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## நமது ஈழநாடு ஒலிம்பிக் 4

ATHENS 2004

இன்னும் 11 நாட்களில்.

# வெற்றி பெறக்கூடிய நிலையில் இங்கிலாந்து அணி



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் - இங்கிலாந்து அணி வீரர்களின் பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 336 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால், இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெறக்கூடிய சாத்தியங்கள் உருவாகியிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் காலை 2 விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்கள் என்ற நிலையில் மூன்றாவது நாள் ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி - தொடக்கத்தில் நிதானமாகவே விளையாடியது.

அணி 221 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது - லாரா 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிளின்ரொப்பின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இவர் 122 பந்துகளில் 15 பவுண்டரிகள, 1 சிக்சருடன் இந்த ஓட்டத்தினைப் பெற்றார்.

இதன் பின்னர் சதம் அடித்த சர்வானும் பிளின்ரொப்பின் பந்துக்கு போல்ட் ஆனார். இவர் 226 பந்துகளில் 25 பவுண்டரிகளுடன் 125 ஓட்டங்களைப்பெற்றார்.

சந்தர்போல் 45 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து சென்றபோது மேற்கிந்திய தீவுகள் அணி 323 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன் பின்னர் வந்த 5 ஆட்டக்காரர்களும் 336 ஓட்டங்களைப் பெறுவதற்குள் ஆட்டமிழந்தனர்.

21 உதிரி ஓட்டங்களை விட்டுக்கொடுத்த இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் - ஜைல்ஸ் 65 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ஹோகாட் 89 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பிளின்ரொப் 2 விக்கெட்டுக்களையும் ஹர்மிசன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதல் இனிங்ஸில் 230 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த இங்கிலாந்து அணி இதையடுத்து இரண்டாவது இனிங்ஸிலும் துடுப்பெடுத்தாடியது.

இங்கிலாந்தின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ட்ரஸ் கொதிக் 137 பந்துகளை எதிர்கொண்டு 12 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 88 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இவர் நிதானமாக நிலைத்துநின்று விளையாடிபோதும்- எதிர்முனையில்நின்ற ஆட்டக்



காரர் அடுத்தடுத்து மேற்கிந்திய வீரர் லோர்சனின் பந்துவீச்சுக்குப் பலியானார்கள்.

ஸ்ரரஸ் - 5, கி - 4, வோகன் - 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். எனினும் அடுத்து ஆடவந்த தோர்ப் ஆட்டநேரமுடிவில் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை ஆட்டம் இடை நிறுத்தப்பட்டபோது - இங்கிலாந்து அணி 3 விக்கெட் இழப்பிற்கு 148 ஓட்டங்களைப் பெற்



றிருந்தது.

இதில் 20 ஓட்டங்கள் உதிரிகளாகக் கொடுக்கப்பட்டன. 7 ஓவர்கள் பந்துவீசிய லோசன் 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## பாலர் விளையாட்டு விழா

வண்ணை - வட மேற்கு கிராம/மாதர் அபிவிருத்திச் சங்க முன்பள்ளி கல்வி நிலைய ஏழாவது வருட பாலர் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## உதைபந்தாட்ட போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை - யாழ். மாவட்டப் பிரிவின் அனுமதியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் வதிரி - தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று -

பி.ப 4 மணிக்கு ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நக்கீரன் வளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (13)

## வலைப் பந்தாட்டப் போட்டி

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் லண்டனில் வசிக்கும் பழையமாணவர் உதைபந்தாட்டக் குழு - இன்று பிற்பகல் 4 மணிக்கு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில் கலந்து கொள்கிறது.

இந்தப் போட்டி இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினர் நடத்தும் 2004 ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் - இன்று பி.ப 5 மணிக்கு கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

# அரசாங்க அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் வடமராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சல் பரவாதிருக்க கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதென பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த ஒருமாதத்தில் வடமராட்சி பிரதேசத்தில் இரு டெங்கு காச்சல் நோயாளர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதான வைத் தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுப் பூரண குணமடைந்துள்ளனர்.

ஆனால், டெங்குக் காய்ச்சல் மேலும் பரவாமல் எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருக்கவேண்டுமெனவும், அதற்கு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பருத்தித்துறை பிரதேச சபை, நகரசபை, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஆகியன ஒன்றிணைந்து செய்யப்பட்டு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் கேட்டுக்கொண்டார்.

டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்கு குறிப்பிட்ட திணைக் களங்கள் போதிய ஒத்துழைப்பு வழங்குவதாக அவற்றின் அதிகாரிகள் எடுத்துக் கூறினர்.

அரசசார்பற்ற நிறுவனமான போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் டெங்குக் காய்ச்சல் தடுப்புத் தொடர்பாக பிரசுரம் ஒன்றையும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் விரைவில் வெளியிடப் படவுள்ளது. (17)

# சி.ஐ.டியினர் கைது செய்த நெடுந்தீவு நபர் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

கொள்ளுப்பிட்டித் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவே நெடுந்தீவைச் சேர்ந்த சி.இரத்தினம் என்பவர் நயினாதீவில் கைது செய்யப்பட்டதாகவும், இவர் கைதுசெய்யப்பட்ட அன்றையதினம் மாலையே இந்த விசாரணையின்பின் விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இது குறித்து கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நபர் கருத்துத் தெரிவிக்கையில் -

கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சந்தேக நபராகக் கருதப்படும் சத்தியலீலாவுடன் தனது பெயரைப் பயன்படுத்தி, தொலைபேசி இணைப்புப்பெற்று வேறு ஒரு நபர் தொடர்பு கொண்டதாலேயே கைதுசெய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

நாளாந்த சம்பளத்திற்காக நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் தன்னிடம் தொலைபேசி இணைப்புப்பெறும் வசதி இல்லை எனவும், குண்டு வெடிப்புத் தொடர்பாகத் தான் சம்பந்தப்படவில்லை எனவும், கைதுசெய்யப்பட்ட பெண்ணுடன்தான் தொடர்பு கொள்ளவில்லையெனவும் தெரிவித்ததையடுத்து சி.ஐ.டியினர் விடுவித்ததாகத் தெரிவித்தார். (113)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தைசேர்ந்த அதிபர்களுக்கான - எச்.ஐ.வி தாக்கத்தினால் உருவாகும் எயிட்ஸ் நோய் தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு இன்றும், நாளையும் யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்கில் யாழ். கல்விவலயத்தை சேர்ந்த ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் இந்த எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப்பணப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

## சமூகப்பணி தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

சமூகப்பணி தொடர்பான டிப்ளோமா 2004/2006 ஆம் கற்கை நெறிப்பாடநெறிக்கு மாணவ - மாணவிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் என்.ஜி.ரத்நாயக்கவினால் கோரப்பட்டுள்ளது.

இந்தப் பாடநெறிக்கான அடிப்படைக் கல்வித்தகுதியாக க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து, குறித்த ஆண்டில் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான விண்ணபத்துக்குரிய தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்து, பதிவுத் தபால் மூலமாக - 'பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், இல.191,தர்மபால மாவத்த, கொழும்பு - 07. என்ற முகவரிக்கு இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கும்படி பணிப்பாளர் நாயகம் கேட்டுள்ளார். (100)

## மிதிவெடி அபாயக் கல்வியை பாடத்தில் சேர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அபாயக் கல்வியைப் பாடசாலை மாணவர்களுக்கு பாடத்திட்டத்தில் ஒன்றாகப் புகட்டுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மிதிவெடிகள் அல்லாத வெடிபொருட்களின் விபத்துச் சம்பவங்களுக்கு இலக்காகிப் பாடசாலை மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், படையினரால் கைவிடப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் பொறிவெடிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக மிதிவெடி அபாயக் கல்வியை மேலதிகமாக ஒரு பாடமாக பாடத்திட்டத்துடன் இணைந்து கற்பிக்கவுள்ளனர்.

இது தற்போது யாழ்மாவட்டத்தில் இயங்கிவரும் சகல பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (17)

## நூலகர் சேவை அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை!

(மானிப்பாய்)

இலங்கை நூலகர் சேவை தரம் II இலும், தரம் III இலும் பணிபுரிந்துகொண்டிருக்கும் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள், இணைந்தசேவைகள் பணிப்பாளர் நாயகம் விக்டர் சமரவீரவினால் கோரப்பட்டுள்ளது.

மேற்படி நூலகர் அலுவலர்களுக்கான தடைப்பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தை வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளபடி தட்டச்சில் தயாரித்து தத்தமது திணைக்களத் தலைவர் ஊடாக இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னராக 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல' என்ற முகவரிகது பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் - பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடல் வேண்டும் எனவும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (100)

## செல்வச் சந்நிதி வருடாந்த உற்சவம்

(வடமராட்சி)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்வசம் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 7.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும். பகல் திருவிழா காலை 8 மணிக்கும், இரவு திருவிழா மாலை 4.30 மணிக்கும் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 30 ஆம் திகதி காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (17)

## வெங்காயம் விலை அதிகரிப்பு விவசாயிகள் அதிக நன்மை

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் அதிக நன்மையடைந்துள்ளனர்.

தற்போது ஒரு அந்தர் வெங்காயம் 3000 ரூபாவாக விலை போகின்றது. அதேநேரத்தில் சில்லறைக்கு ஒரு கிலோ 60 ரூபாவாக சந்தையில் விற்கப்படுகிறது.

கடந்த பெரும்போக காலத்தில் அறுவடை செய்த வெங்காயம் நல்ல விலையைப் பெற்றுள்ளதால் பெரும் தொகையான விவசாயிகள் சிறுபோகத்தில் பயிரிட்டப்பட்ட வெங்காயம் இப்போது அறுவடை வெய்யப்பட்டு வருகிறது.

விவசாயிகளிமிருந்து கொள்வனவு செய்துவரும் வியாபாரிகள் நாட்டின் பல பாகங்களுக்கும் அனுப்பிவைக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (17)


# நிகழ்வுகளின் பதிவுகள்




மானிப்பாய் பிரதேச சபையினால் நடத்தப்பட்ட 'சுகாதாரப் பொதி' வழங்கும் நிகழ்வில் - மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் உரையாற்றுவதையும், அருகில் பிரான்பற்று சனசமூக நிலையத்தின் தலைவர், செயலாளர், பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர், யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (100)



வடமராட்சி லயன்ஸ் கழக புதிய உறுப்பினர்கள் பதவியேற்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டாக்டர் எஸ்.அருளானந்தம் உரையாற்றுவதைக் காணலாம். (17)



சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற கோப்பாய் சிவம் எழுதிய இரண்டு நூல்களின் அறிமுக விழாவில் - சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கத்திடமிருந்து சொற்பொழிவாளர் குமாரசாமி பிரதியொன்றைப் பெறுவதைப் படத்தில் காணலாம். (101)



கனடா கலைவாணி மன்றத்தினரால் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திற்கு கணினியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்த வைபவத்தின்போது அதிபர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (101)




# விளைவுகள்


சைக்கிள் கரியரில் கட்டியிருந்த பெட்டியினை ஒரு கையால் பிடித்தபடி மெதுவாக மிதித்துக் கொண்டிருக்கின்றேன். கடந்த மூன்று நாட்களாகவே உடலுக்கு ஓய்வுகாணாத வேலைகளாயிருந்தாலும், இன்று வேலைப்பழு சற்று அதிகமாகிவிட்டது என்னமோ உண்மைதான். அதனால் தானோ என்னவோ ஏழு மணிக்கே நித்திரை கொள்ளவேணும் போல் ஒரு தேவையை உடல் வேண்டிநிற்கின்றது.

இன்று எனது மாமியின் ஆண்டுத்திவசம். வழக்கம்போல தவமணியின் அதுதான் எனது மனிசியின் சகோதரர்கள் நாலு பேரும் வெளியில் இருந்து அனுப்பிய காசிலை வலுசிறப்பாகச் செய்து வீடியோவிலையும் பதிச்சாச்சுது. இனி அத இதப் போட்டு மிக்ஸ்பண்ணி சீடிக்கு ஏத்தி ஆளுக்கொன்று அனுப்பிவைத்தால்தான் இந்த வருச திவசவேலைகள் முற்றுப்பெற்ற மாதிரி இருக்கும். அதுகள ஒரு மாதிரி ஒப்பேற்றிப் போடலாம். இப்ப இருக்கிற பிரச்சனை மிஞ்சிப் போய்க்கிடக்கிற சோறு, கறியை ஆரேனும் ஏழை, இயலாததுகளுக்குக் கொடுத்துமுடிக்க வேணும். அவன் அறுவான் அளவு தெரியாம அரிசிக் கணக்கச் சொல்லி ஆக்கித் தள்ளிப்போட்டு தனக்கேத்தபடி அள்ளிக்கொண்டும் போட்டான். மிஞ்சிக்கிடக்கிறதுகள அங்கால, இஞ்சால அள்ளித்தள்ளி விடுறதுக்கு ஏலாமல் கிடக்கு. இந்தா இப்ப இதில ஒரு பதினைஞ்சு பார்சல நல்லூர்க் கோயிலடிக்குக் கொண்டு போறன். அங்க தேரடியில இருக்கிற பிச்சைக்காரர்களுக்கு கொடுக்கத்தான். ஆனா அதுவும் கொஞ்சம் சந்தேகம்தான். நேரம் போட்டுதல்லோ. அதுகள் எதையும் போட்டு வயிற்றை நிறைச்சிருக்குங்கள். சில நேரங்களில வாங்காம, வேணாம் எண்டு சொன்னாலும் சொல்லுங்கள். பாப்பம் அதுகளும் வாங்காட்டி அப்படியே திரும்பி நேராகப் போய் வைமன் றோட்டுப் பக்கம் சைக்கிள விட்டா, பழைய ஈழநாதத்துக்குப் பக்கத்தில கிடக்கிற குப்பை மேட்டில பெட்டியோட போட்டுட்டுத் திரும்பலாம். நாய்கள் இல்லாட்டி ஆடு, மாடுகளாவது சாப்பிடட்டும். எதிரே வந்த மோட்டார் சைக்கிளின் வெளிச்சம் கண்களைக் கூசச்செய்ய சிந்தனை தடைப்பட்டது. வாய் சற்று சத்தமாகவே முணுமுணுத்தது.

"எருமை மாடுகள், வாகனத்தில ஏறிக் குந்தினாச் சரி, பாதையில போறவாறவங்களை மதிக்கமாட்டானுகள். டிம் பண்ணாம போனா சைக்கிள் ஓடுற நாங்களல்லவா கானுக்குள்ள விழவேண்டிக் கிடக்கு... சீச்சீ... வரவர எங்கட சனங்களுக்கு நீதி நியாயத்த, சட்டம் ஒழுங்க மதிக்கவேணும் என்ற எண்ணமே இல்லாமல் போட்டுது." இயல்பாகவே வாயிலிருந்து வந்து விழுந்த அந்த வார்த்தைகளுடன் இணைந்த எண்ண ஓட்டத்தை எனது அடிமனதில் இருந்து எழுந்துவந்த ஒரு பயங்கரமான சிலந்தி, தனது அருவருக்கத்தக்க கால் கொடுக்குகளால் அழுத்திப் பிடித்து இழுத்து அமர்த்திவிட்டு அதன்மேல் நின்றுகொண்டு என்னைப் பார்த்து தலையை அசைப்பது போல ஒரு... உணர்வா? அல்லது நிகழ்வா? என்னவென்று கூறமுடியாத ஒருவித அவஸ்த்தையில் நான் என்னை அறியாமலேயே சைக்கிளில் இருந்து குதித்து இறங்குகின்றேன். கண்களை இறுக்கி மூடியபடி ஆழமாக மூச்சை இழுத்து விடமுயல்கின்றேன். முடியவில்லை. சிலந்தி மிகவும் கோரமாக என்னை அழுத்துவது நன்றாகத் தெரிகின்றது. வலியை உணர முடிகின்றது. உடம்பு மெல்லியதாக நடுங்குகின்றது. தொடர்ந்தும் கண்களை மூடியபடி இருக்கப் பயமாக இருக்கின்றது. தலையைப் பலமாக உதறியபடி கண்களைத் திறக்கின்றேன். என்னைக் கடந்துபோன ஒரு வாகனத்தின் வெளிச்சத்திலே எனக்கும் சற்று முன்னே எனது மாமி என்னை நோக்கி நடந்து வருவது போலத் தெரிகிறது. உடம்பு நடுக்கத்தைக் கட்டுப்படுத்த சைக்கிளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்கின்றேன். முடியவில்லை. சைக்கிளுடன் சேர்ந்து விழுந்து விடுவேனோ?

சைக்கிளை மெதுவாக நிறுத்திவிட்டு மூடிக்கிடந்த கடையின் தாவாரத்து சீமெந்துக் கட்டிலில் குந்திக்கொள்கின்றேன். இதயம் வேகமாகத் துடிக்கும் சத்தம் காதுவரை கேட்கிறது. கால்கள் இரண்டும் நடுங்குகின்றன. இடதுபக்க முதுகுத்தசைகளில் ஏதோ ஒரு புழு ஊர்வதுபோல ஒரு உணர்வு? இல்லை இல்லை தசைகள் துடிக்கின்றன போல் இருக்கின்றது. வியர்வையால் உடம்பு குளித்துவிட்டது. என்னவென்று கூற முடியவில்லை. ஆனால், என்னால் தாங்க முடியவில்லை.

நல்லூர்க் கந்தா, என்னப்பா இது? இன்னும் எத்தனை நாளைக்கு நான் இந்தத் துன்பத்தில் உழலுவது?. ஒன்றா?, இரண்டா? ஒன்பது வருஷமாகின்றது. இந்த மரண வேதனையை அனுபவிக்கத் தொடங்கி. ஆரம்பத்தில் இப்படி எனக்குக் கஷ்டமானதாக இருக்கவில்லை.




வரவரத்தான் இந்த அவஸ்த்தையைத் தாங்க ஏலாமல்கிடக்கு. மாமியின் அந்த முகம் அடிக்கடி என் முன்தோன்றி ஏதோ கேட்கத் துடிப்பதுபோல இருக்கின்றதே. அது என்ன? ஐயோ, மாமி என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ. முருகா, நான் வேணுமெண்டு செய்யலயப்பா, என்னைக் காப்பாத்தப்பா. வேலா, கந்தா, இந்தத் துன்பத்தில் இருந்து என்னைக் காப்பாத்தினா வருஷத் துக்கு ஒண்டா ஒன்பது பவுணுல சங்கிலி செய்து சாத்துவனப்பா, கடம்பா கதிர்வேலா என்னைக் காப்பாத்தப்பா, என்னை மன்னிச்சுப் போடப்பா...........

மனது தன்வலு இழந்து ஓலமிடுகிறது. இரு கைகளாலும் தலையைத் தாங்கியபடி என்னிலை மறந்து அழுது கொண்டிருந்த நான், பல்லி கத்தியது போன்று ஒரு சத்தம் கேட்க தலையை நிமிர்த்துகின்றேன். என்முன்னே தலைவிரி கோலத்தோடு என் மாமி நிற்கின்றார். அவரது கண்களில் இருந்து கண்ணீர் வழிகின்றது. தலையை மேலும் கீழுமாக அசைத்து ஏதோ கேட்கின்றா? ஆனால், அது எனக்கு கேட்கவில்லை. இருப்பினும் விளங்கிக் கொள்ள முடிகிறது. கண்களை மீண்டும் இறுக்கி மூடிக்கொண்டு இரண்டு கைகளையும் தூக்கிக் கும்பிட்டபடி மன்றாட்டமாகக் கூறுகின்றேன். "மாமி என்னை மன்னித்து விடுங்கோ. நான் வேணுமெண்டு செய்யல. அண்டைக்கு இருந்த சூழலில என்ன செய்யிறதெண்டே தெரியல. ஆமிக்குப் பயந்து, ஊரைவிட்டு ஓடி, எழுதுமட்டுவாழில அந்தத் தென்னந்தோட்டத்தில குடிசை போட்டு இருக்கக்குள்ளயும், உங்களைப் படுக்கையோட தூக்கிக்கொண்டுபோய் பக்குவமாகத்தானே பார்த்தனாங்கள். மருந்து, மாத்திரை கூட நேரத்துக்கு நேரம் தந்து, சாப்பாடும் தீத்தி விட்டது நாங்கள்தானே. அண்டைக்கு சாவச்சேரியையும் ஆமி பிடிச்சிட்டான் எண்டு சொல்லிக்கொண்டு சனம் வன்னிக்குப் போறதுக்காக கிளாலிக்கு ஓடக்குள்ள உங்கள எப்படிப் படகேற்றி வன்னிக்கு கொண்டுபோறது எண்டு தெரியாமற் கிடந்து அல்லற்பட்டநாங்களல்லே. நீங்ககூட இரண்டு மூணுதரம் தவமணியர் கூப்பிட்டு என்ன? ஏது? எண்டு விசாரித்தது ஞாபகம் இருக்கே?

உங்களைக் கட்டிலோட படகில் கொண்டு போக ஏலாது எண்டு அவங்களும் சொல்லிப் போட்டாங்கள். உங்களோடசேர்ந்து நாங்களும் இங்கால இருக்கிறதெண்டா வயதுக்கு வந்த பிள்ளைகளை வைத்துக்கொண்டு எப்படி இருக்கிறது? எக்கணம் ஏதும் செய்துபோட்டு சுட்டு எரிச்சுப் போடுவாங்கள் என்ற பயம், செல்லடியும் அகோரமாக இருந்தது. அது வேறு பயத்தைத் தந்தது. என்ன செய்யிறது என்று பதற்றப்பட்டுக்கொண்டிருக்கேக்குள்ளதான் அவன் குமாரசாமியாற்ற மகன் கார்க்கார நடேசுதான் இப்படிச் செய்துபோட்டுபோறது பறவாயில்லை எண்டு சொன்னவன் - எனக்கோ, தவமணிக்கோ ஆரம்பத்தில இதுக்கு கஷ்டமில்லைதான். ஆனால் அவன் உறுதியாகச் சொன்னான் இதில ஒன்றுமில்ல. யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. சீவன் சத்தமில்லாமல் அடங்கிப் போகும் எண்டு அவன் சொல்லித் தைரியம் தந்ததாலதான் தவமணியும் கொஞ்சம் யோசிச்சவள். பிறகுதான் அவள் உங்கட மகள் அம்மாவ இப்படியே இந்தத் தென்னந்தோட்டத்துக்க விட்டுட்டுப்போய் நான் அங்க நிம்மதியாக இருக்கமுடியாது. யோசிச்சுப்பார்த்தா நடேசண்ணை சொல்லுறதுதான் சரிபோலக் கிடக்கு. என்ன செய்யிறது வேறவழி இல்லத்தானே. அப்படியே செய்துபோட்டுப்போவம் கிளாலிக் கரையில இப்பவே சரியான சனக்கூட்டமாக இருக்குதாம். காலையில பிளேனால் குண்டுபோட்டு கனபேர் செத்தவையாம். அதால இரவுக்கு சனம் குவிஞ்சு போய்தான் கிடக்கும். அதுக்குள்ளாலே வள்ளம் புடிச்சு போறதெண்டா பெரிய கஷ்டம்தான். அப்பபின்ன காரியத்த முடிச்சிட்டு வெளிக்கிடுவம் எண்டு சொல்லி சாக்குரெண்டையும் நனைச்சித் தந்தவள். அம்மாவான மாமி நான் விருப்பம் இல்லாமத்தான் உங்களுக்கு மேல ஈரச்சாக்குப் போட்டு மூடுனனான்.

உங்கட பேரப்பிள்ளைகள் காணாதபடிக்கு உங்களுக்குமேல ஈரச்சாக்குப்போட்டு மூடிற்று நல்ல குடும்பமா வன்னிக்குப் போனாலும் அங்கபட்ட துன்ப துயரம் கொஞ்சநஞ்சமல்ல மாமி. உங்கமேல் ஆணையாச் சொல்லுறன் உங்கள ஒருமாதிரி ஏத்தி வள்ளத்தில கொண்டு போயிருந்தால்கூட, நீங்க வள்ளத்திலேயே செத்திருப்பீங்க. அப்படிக் கஷ்டப்பட்ட பயணம் அது, அந்த செல்லடிக்குள்ள நாங்க வேற என்னத்தைத்தான் செய்யஇயலும்? மன்னிச்சுக்கொள்ளுங்கோ மாமி. என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ...

கண்களை மூடி தலையிலடித்தபடி புலம்பிய எனது சத்தத்தைக்கேட்டு கடையின் மறுபக்கத்தாழ்வாரத்தில் சாம்பலைக் கிளறிவிட்டு சுருண்டுபடுத்துக் கிடந்த நாய் குலைத்த சத்தம் கேட்டு கண்களைத் திறக்கிறேன். வீதி வெறுமையாகக் கிடக்கின்றது. சைக்கிள் நிறுத்தியபடி அப்படியே நிற்கின்றது. மனதை அழுத்திய அந்த சிலந்தியின்பிடி விடுபட்டமாதிரி ஒரு லேசான உணர்வை உணரமுடிகிறது. சிலந்தியும் இல்லை. மாமியும் இல்லை. இதயத் துடிப்பு சற்று வேகம் குறைந்திருக்கிறது. கால்களில் நடுக்கம் இல்லை. பதட்டம் குறைந்ததுபோல் இருக்கின்றது. ஆனால் பயம் குறையவில்லை. கைகள் இரண்டாலும் முகத்தை சற்று அழுத்தித் தேய்த்தபடி கண்ணீரையும் துடைத்துவிடுகின்றேன். மெல்ல எழுந்து பாதங்களால் பூமியை அழுத்தி - மெதுவாக அழுத்தி நிமிர்ந்து நிற்கின்றேன். சைக்கிளில் உணர்வுப் பார்வைகளுடன் பெட்டி இருப்பது இப்போது கண்களுக்கு நன்றாகத் தெரிகின்றது. சைக்கிளின் அருகேவந்து மெல்ல அதன் கைப்பிடிகளைப் பிடிக்கின்றேன். என்னால் அடுத்த செயற்பாட்டைப் பற்றி சிந்திக்கவோ, செயறபடவோ இயலாதவாறு உள்ளது. நினைவுகள் அறுபட்டு அறுபட்டு துண்டு துண்டாக வந்துபோகின்றன. இப்ப நான் எந்தப்பக்கம் போவது? ஒரே குழப்பமாக இருக்கின்றது..

நான் எனது உடலைவிட்டு தூரத்தே போய் நின்றபடி உடலைப் பார்த்து அழுவதுபோல ஒரு தோற்றம். எனது கைகள் சைக்கிளைப் பிடித்திருந்தாலும் - கால்களும் கைகளும் எனது சொந்தம் இல்லாததுபோல இருக்கின்றது. எனக்கு என்ன நடந்தது? ஏன் இந்த நிலை? எனக்கு உதவுவதற்கு யாரும் வரமாட்டார்களா? சைக்கிளை உருட்டுகின்றேன். போகும் இடத்தை இன்னும் தீர்மானித்துக் கொள்ள முடியவில்லை.

எஸ்.விஜி

## இலக்கிய முத்து

# வெய்யிலைத் தணித்த நிழல்



தீக்குளம்பினை வார்த்துவிட்டது போன்று தவிக்கின்றது பாலைநிலப்பரப்பு. கதிரவனின் கனற் கதிர்களுக்குத் தாக்குப் பிடிக்கமுடியாமல் அங்குள்ள மரங்கள் உலர்ந்து எரிந்து புகைக்கின்றது. அந்தப் புகைமூடம் பாலையின் வெப்பத்தினை பலமடங்காக்குகின்றது.

பாலையிலே வானமகள் கண்ணீர் விடுவதில்லை. சிலர் அழுதால் சிலர் சிரிப்பார். இங்கே வானமகள் அழாததால் பூமிப்பெண் கொதிக்கின்றாள். அடுத்தவர் துன்பத்தில் சுகம் காணும் அற்பத்தனம் பூமாதேவிக்கு வந்துவிட்டதோ?

குறிஞ்சி நில மலை உச்சிகளிலே உருண்டு விளையாடும் முகில்கள் பாலையைக் கடந்து முல்லைக்குள் பிரவேசிப்பதற்குள் வெப்பத்தால் தீய்ந்து இளைத்துப் போயின.

இப்படியான பாலையிலே பார்ப்போர் உள்ளத்தை உருக்கும் காட்சி ஒன்று நிகழ்கிறது.

பருவத்தின் விழிப்பில் பற்றியெரிந்து சருகாகிப்போன ஆயிரம் ஆயிரம் மானிடக் காதல்களுக்கு இரண்டு ஐந்தறிவு ஜீவன்கள் காதற் பாடம் கற்பிக்கின்றன. மானிடக் காதலிலும் பார்க்கப் புனிதமான தெய்வீகக் காதல் இது.

காற்றும் கனலாகும் பாலை நிலப்பரப்பிலே கால்கள் தள்ளாட நடந்து வருகின்றன கலையும் பிணையும். கொளுத்தும் வெயிலைத் தணிக்கின்றது அவற்றின் காதல் மழை. உனக்கு நான், எனக்கு நீ என அவற்றின் பயணம் தொடர்கின்றது.

தாகத்தால் நாவறண்டு போகின்றது. நடக்க முடியவில்லை பிணையால். பாவம் அது இப்போது தனக்குள்ளே இன்னொரு ஜீவனைத் தாங்குகின்றது.

பாலையின் அனலிலே அதனால் மேலும் ஒரு அடிகூட நடக்க முடியவில்லை. இளைப்பாற ஒரு இடம் தேவைப்படுகின்றது. ஈ கூட உட்காருவதற்கு ஒரு மரநிழலாவது இல்லாத பாலையிலே பிணை எவ்வாறு இளைப்பாற முடியும்.

தன் துணையின் துன்பம கண்டு துடிக்கின்றது கலை. தன் ஆருயிர்க்காதலி படுத்துறங்கத் தன்னை நிழலாகக் கொடுக்கின்றது கலை.

கொதிக்கும் வெய்யிலில்தான் நிற்கின்றது. கலையின் நிழல் தரையிற்படுகின்றது. அந்த நிழலிலே இளைப்பாறுகின்றது பிணை. இங்கே மானிடக் காதல்கூட தோற்றுப்போகின்றது.

"இன் நிழல் இன்மையான் வருந்திய மடப்
பிணைக்கு
தன் நிழலைக் கொடுத்தளிக்கும் கலை"
(கலித்தொகை)

லெஸ்லி

# அந்திப் பொழுதில் அலைமோதும் நினைவலைகள்



எண்ணங்களுக்கும் ஒலி உண்டா?

இப்படி ஒரு கேள்வி நான் செபம் செய்து வந்த காலங்களில் என்னில் எழுவதுண்டு. பண்டிதர் நமசிவாயம் என்னைவிட வயதில் கூடியவர்.

அவருக்கு அப்போது வயது எழுபத்தைந்துக்கு மேல் இருக்கும். பார்வை மந்தம். செவியும் மந்தம். ஆனால், அறிவிலோ அவருக்கு ஈடு, இணை எவரும் இல்லை. குரலிலே மென்மை இருக்கும், பேச்சிலே கனிவு இருக்கும். அவர் சிடுசிடுத்ததையோ கடுகடுத்ததையோ எவரும் கண்டிலர்.

செபத்தை மூன்று வகையாகப் பிரித்துப் பேசுகின்றன நூல்கள். ஒருவர் மந்திரம் செபிக்கும்போது, செபிக்கும் மந்திரம் பிறர் செவிகளிலே கேட்கும்படி செவிப்பது ஒரு வகை, தனக்கு மட்டும் கேட்கும்படி உதடு அசையச் செவிப்பது இன்னொருவகை. பிறருக்கும் கேளாமல் தனக்கும் கேளாமல் உதடும் அசையாமல் செவிப்பது மூன்றாவது வகை. இந்த மூன்று வகை செபத்தினால் கோடி நன்மை உண்டு என நூல்கள் பகரும். இந்த மூன்றாவது வகைச் செபம் பயன் அதிகமுடையதுதானா என்பது என் கவலை. பண்டிதர் நமசிவாயத்திடம் சென்றேன். ஒரு மாலை வேளையில்.

பண்டிதர் அதிகம் பேசும் வழக்கம் இல்லாதவர். எனது கேள்விக்குப் பின்கண்டவாறு விடையளித்தார். தமக்கு எதிரே இருந்த மேசை மேல் தமது ஆட்காட்டி விரலால் ஒரு தடவை ஓங்கித் தட்டிவிட்டு என்னைப் பார்த்தார். மேசை மேல் தட்டியதால் வெளியான ஒலி என் செவிகளை வந்தடைந்ததைக் கூறினேன். இரண்டாவது தடவை முன்னிலும் பார்க்க சற்றுக் குறைவான ஒலியை உண்டாக்கினார். இப்பொழுது ஒலியின் சத்தம் குறைவாக இருப்பதாகச் சொன்னேன். மூன்றாவது தடவை தமது விரலை மேசைமேல் தொட்டுவிட்டு என்னை நோக்கினார். என் வியப்பை எப்படிச் சொல்வது! 'ஐயா, ஒரு பொருள் பிறிதொரு பொருளை வெறுமனே முட்டினாலும் ஒலி இருக்கவே செய்யும். அந்த ஒலி நம் செவிகளில் விழவேண்டுமென்பதில்லை' எனப்பதிலளித்னே. அவருக்குப் புரிய வைத்த திருப்தி, எனக்கோ புரிந்துகொண்ட திருப்தி, நான் அவரிடமிருந்து விடைபெறும் போது, மறுபடியும் பிறிதொரு சந்தேக நிவர்த்தி செய்துகொள்ள வருவதாகக் கூறிச்சென்றேன். ஒளி பற்றிய சந்தேகமே அது..

மனம் என்றால் என்ன?

கோட்டும் சூட்டுமாய் ஏதோ சமயப் பிரசாரகாரர்கள் எனத்தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு வாலிபர் சிலர் பண்டிதர் நமசிவாயத்தின் எதிரில் இருந்த நாற்காலிகளில் வந்து அமர்ந்தனர். பண்டிதர் அவர்கள் இவர்களைக் கண்டும் காணாததுபோல், ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். நிமிடங்கள் ஓடிக்கொண்டிருந்தன, வந்திருந்தவர்களில் ஒருவர் பொறுமை இழந்து 'பெரியவரே' மனத்தில் எதைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள்? எனக் கேட்டார்.

*பண்டிதர் நமசிவாயத்தின்*
*மௌனம் கலைந்தது.*
*தனக்கே உரிய கனிந்த குரலில்*
*'மனம் என்றால் என்ன ராசா?' இதைக்கேட்டு,*
*வந்தவர்கள் வியர்த்து விறுவிறுத்தனர்.*
*சொல்லாமற் கொள்ளாமல் எழுந்து சென்றனர்.*

பண்டிதர் நமசிவாயம் திருகோணமலையின் ஒரு புறநகர்ப் பகுதியில் வசித்துவந்தார். அவர் பற்றி அறிந்து வியந்தவர் ஒரு சிலரே. பண்டிதர் இன்று இல்லை. எனினும் என் போன்ற ஒரு சிலரின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

- சோளங்கன்

# அறிவின் ஆழம் ஆரவாரமற்றதும் அமைதி நிறைந்ததும் ஆகும்

தமிழ் மொழியிலே 'மௌனம்' என்றொரு சொல் காணப்படுகின்றது. தொல்காப்பியர் குறிபபிடுவதுபோல எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற இலக்கணத்தின் அடிப்படையில் நோக்குகின்றபோது 'மௌனம்' என்ற சொல் பல கருத்துக்களைக் குறிப்பதைக் காணலாம்.

திருக்குறளில் மௌனம் என்றொரு சொல் வருகின்றது. இந்தச் சொல் 'சொல்லாதிருத்தல்' என்ற சொல்லாகவே திருக்குறளில் இடம்பெறுகின்றது.

*'கல்லாதவரும் நனி நல்லார் கற்றார் முன்*
*சொல்லாதிருக்கப் பெறின்'*

என்ற திருக்குறளில்' சொல்லாதிருத்தல் என்பது மௌனத்தையே குறிக்கின்றதெனலாம்.

கற்றவர் நிறைந்த சபையிலே கல்லாத ஒருவன் இருக்கும் போது அந்தக் கல்லாதவன் ஒரு வார்த்தை கூறும்வரை கற்றவராகவே மதிக்கப்படுவான். கற்றவர்களுக்கு கொடுக்கும் மரியாதையே இவனுக்கும் கொடுக்கப்படும்.

இந்தக் கருத்தையே ஔவையாரும் ஒரு அறிஞர் நிறைந்த சபையிலே காணப்படும் கல்லாத - அறிவு கொஞ்சம் குறைந்த ஒருவன் பேசாது இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் பேசமுற்பட்டால் அது நாய் குரைத்தது போன்றதாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

இங்கே மௌனம் அல்லது பேசாதிருத்தல் என்பதன் பொருள் அறிவுடைமையைக் காட்டுகின்றது எனலாம்.

இதே கருத்திலே 'நிறைகுடம் தளம்பாது குறைகுடம் தளம்பும் என்ற பழமொழியும் காணப்படுகின்றது.

ஆழம் கூடக்கூட கடலின் தன்மை அமைதி நிலையைப் பெறுகின்றது. ஆழம் குறையக் குறைய அலையின் இரைச்சல் அதிகமாகின்றது. ஆழம் குறைந்த கரையில் இரைச்சல் அதிகமாக இருப்பது இதனாலேயே என அறிஞர் குறிப்பிடுகின்றனர்.

அறிவின் ஆழம் அமைதியையும், அறிவின் ஆழமற்ற தன்மை ஆரவாரத்தையும் குறிப்பதைக் காணலாம். ஆழம் கூடிய கடலில் சிற்பி, முத்து போன்ற கடல்படுதிரவியங்கள் விளைவது போல அமைதி - மௌனம் நிறைந்த இடத்தில் அறிவின் சிறந்த கருத்துக்கள் தோற்றம் பெறுகின்றன.

மௌனத்தின் பொருள் சம்மதமாகவும் அமைந்து விடுகின்றது. ஒருவர் இன்னொருவரிடம் ஒரு கருத்தைக்கூறி அவரின் கருத்தை அறிய விளைகின்றார். அப்போது கேட்டவரிடம் பதில் சொல்ல வேண்டியவர் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தால் - மௌனமாக இருந்தால் கேட்டவரின் கருத்தை ஏற்றுக்கொள்கின்றார் என்று அர்த்தமாகும்.

திருமணத்துக்கு பெண் பார்க்கும் சம்பவங்களில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்கின்றன. பெண்ணிடம் ஆணைப் பிடித்திருக்கின்றதா? எனக் கேட்கும்போது பெண் ஆணைப் பிடித்திருந்தால் தலையைக் குனிந்து காலால் கோலம் போட்டுக் காட்டுவாள். மௌனமாக வார்த்தைகளை அடக்கி தனது சம்மதத்தை தெரிவிப்பாள் என்று பெரியோர் கூறுவார்கள். இந்த வழக்கம் பாரம்பரியமாக நடைமுறையில் இருந்து வருகின்றது. இந்த நிலையில் மௌனம் சம்மதம் என்ற பொருளைத் தருவதைக் காணலாம்.

மௌனம் சில சந்தர்ப்பங்களில் தண்டனையாகவும் அமைந்துவிடுகின்றது. பிடிக்காத செயலை ஒருவன் செய்கின்ற போது அவன் மேல் கோபம் கொள்ளுகின்ற இன்னொருவன் அவனோடு கதைக்காமல் விடுகின்றான். அவ்வாறு கதைக்காமல் விடுவது அவனுக்குத் தண்டனையாக அமைகின்றது.

நன்றாகப் பழகிய நண்பர் அல்லது காதலர்களிடையே இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி திழ்வதுண்டு. காதலன் காதலியிடையே நடைபெறும் இவ்வாறான மௌனங்களை 'ஊடல்' பொய்க்கோபம் என்று தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய தண்டனைகளை மௌனங்களால் அனுபவித்தவர்கள் இதன் வலியை நன்றாக உணர்ந்து இருப்பார்கள்.

மௌனம் சில சமயங்களில் மன்னிப்பாகவும் அமைந்து விடுகின்றது. ஒருவன் மேல் கோபம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மௌனமாகத் தனது மனதில் ஒன்று தொடக்கம் பத்துவரை - கோபம் அடங்கும்வரை, மனதுள் எண்ணிக்கொண்டால் கோபம் அடங்கிவிடும் என உளவியலாளர் குறிப்பிடுகின்றனர். கோபம் கொண்டு ஏற்படும் விபரீதங்களுக்கு ஆளாகாமல், மௌனமாக இருந்து மன்னிப்பை வழங்கிவிடுவதன் மூலம் நண்பர்களைப் பெற்றுக்கொள்ளலாம். வளர்கின்ற பகையை முளையிலே கிள்ள, தீமை புரிந்தவரை தண்டிக்க - மௌனம் - மன்னிப்பு - சிறந்த சாதனமாக அமைகின்றது.

பூ. நகுலன்

## வெற்றியாக...

புரியவில்லை என்றேன் புரிகிறது
சிலருக்கு சின்னமான உவமைகள்
தோன்றி மறையலாம்
கடலின் அலையலையாய்
தென்றலின் ஆர்ப்பரிப்பாய்
வானோலசைகளின் சிலிப்புக்கள்
வானவேடிக்கை காட்டும்
வானம்பாடிகளின்
கொண்டாட்டம்
சிலரை சிலருக்குப் பிடிக்கலாம்
இல்லையேல் வெறுக்கலாம்
வாழ்க்கையோர் போராட்டம்
அதில் வாழ்ந்து காட்டுவதே
மனிதனின் சித்தி
பாரினில் அழகைப் பெறலாம்
புதுமை பெறலாம்
விந்தை காட்டலாம்
வியத்தகு செய்திகளை
அள்ளி வீசலாம்
சோகத்துடன் கண்ணீரைப்
பொழிந்தால் - அது
சிலருக்கு
மடமையாகலாம்
வீரத்துடன் கண்ணீரைப்
பொழிந்தால் - அது
வரலாற்றின் கின்னஸ்
சாதனையாகலாம்
இதனைப் புரிந்து கொண்டால்
வாழ்க்கையில் - நாம்
ஜெயிக்கலாம்

இன்பராஜ்

## தயாராகுவோம்



என் தேசத்தாயவளின் மேனியதில்
வாழுகின்ற தேச உறவுகளுக்கு
மூன்று வயதினை எட்டிப் பிடிக்க நிற்கும்
சமாதான வாழ்வில் எதைக்கண்டோமென
எம் மனச்சாட்சியை தொட்டுக்கொள்ளும்
கேள்விக்கு
பதிலைப் பார்ப்போம்

இச் சமாதானத்தில்
எங்கள் இயல்பு வாழ்வு திரும்பியதா?
அகதி வாழ்வின் அவலம் முடிந்ததா?
ஊருக்குச் சென்று வர, உயர்
பாதுகாப்பு வலயம்தான் விட்டதா?
இல்லை, எதுவுமே நடக்கவில்லை

A-9 பாதையையும் பாதையில் வரும்
வாகனத்தையும் வாகனத்தினுள் வரும்
ஆப்பிலும் ஆடம்பரப் பொருட்களையும்
தான்
நாங்கள் கண்டோம் - இதுவா?
நாம் கேட்ட சுதந்திரம் இதற்கா
இத்தனை உயிர்களும் சமர்ப்பணம்
ஒரு கணம் சிந்தியுங்கள்

சமாதானம் என்ற பாதையூடே
எங்கே சென்றுவிட்டோம்? - இது
எங்கள் விடுதலைக்கானதா?
விடுதலைக்கானதல்ல
ஆட்டங்காணும் அரசைப் பாதுகாக்க
சர்வதேச சமூகத்திடம் உதவிகள் பெற
தமிழர் போராட்டத்தை மழுங்கடிக்க

ஏன்? கிழக்கில் என்ன நடந்தது
பிரிவினைகாட்டி எமது அமைப்பையோ
பிரித்தனர் - ஆனாலும்
தலைவனின் திறனால் வென்றோம்
தமிழன் போரியல் வரலாற்றில்
கூடப்பிறந்தவனே குழிபறிப்பது
சகசமானது ---
எட்டப்பனும் துரையப்பாவும்
காக்கைவன்னியனும் கதிர்காமரும் - இன்று
டக்ளஸ் உடன் கருணாவும்
இதை விடுதலை வளர்ச்சியின் ஒரு
உயர்ச்சியென எண்ணுவோம்

தமிழ் உணர்வில் உயிர் மிக்க
- நெஞ்சங்களே
உரிமையை வென்றெடுக்கும்
காலம் வந்துவிட்டது. ஓயாத அலைக்கும்
மீண்டும் ஒரு அழைப்புவிடுவோம்
- அங்கே
அடுக்கிவைத்துள்ள ஆயுதங்களை
துப்புரவு செய்வோம்
போரிடுவதற்கல்ல போர்
கொண்டு வருபவர்களை வெல்வதற்கு

என் உறவே - நாம்
வளர்த்த விடுதலைப் பயிர்
மீண்டும் கொஞ்சம் உரம் கேட்கிறது
தான் முழுமையாக வளர்ச்சிபெற - அதை
நாம் கொடுக்கத் தயாராகுவோம்

கி.கலையுஷா
- யாழ் -

கே.ரி.கணேசலிங்கம்

# சவுதி அரேபியா பிராந்திய வல்லரசுக்கு தயாராகிறதா ?




இஸ்லாமிய அடிப்படைவாதம் உலகத்தில் கேள்விக்குரிய காரணியாக மாறிவருகின்றது. தீவிரவாதமோ, அடிப்படைவாதமோ மேற்கு நாடுகளை அச்சுறுத்தும் அம்சமாகப் பார்க்கும் போக்கு வளர்ந்து வருகின்றது. இஸ்லாமியத் தீவிரவாதமும் தாக்குதல்களையும், மிரட்டல்களையும் கைவடுவதாக இல்லாது தொடருவதாகக் காணப்படும் போக்கு இஸ்லாமிய சமூகத்திற்கே ஆபத்தானதாக மாறிவருகின்றது. இதனால் இஸ்லாமிய நாடுகளில் ஏற்பட்டு வரும் அழிவுகளும், கொலைகளும் முழு உலகத்திற்குமே அச்சுறுத்தல் விடும் அரசியலாக காணப்படுகின்றது.

இந்த அரசியலில் சில இஸ்லாமிய நாடுகளும் அவைகளின் தலைமைகளும் வகுத்து வரும் திட்ட மிடல் இஸ்லாமிய இனத்தை அழிக்கும் நடவடிக்கையாகவே விளங்குகிறது.

ஈராக்கில் அடுத்தடுத்து நிகழ்ந்து வரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும், இதரவகைத் தாக்குதல்களும் ஈராக்கிய மக்களையும், ஆக்கிரமிப்பு இராணுவத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. தாக்குதல்களின் மாதிரிகள், அதனால் ஏற்படும் உயிரழிவுகள், உடமை இழப்புகள் ஈடுசெய்யக் கூடியவையாக மாற்றமுறுவது கடினமானதென்பதை விட அந்த நடவடிக்கையின்- அரசியல் இராணுவப் பாதிப்புக்கள் பாரிய பின்னடைவை ஈராக்குக்கும், ஆக்கிரமிப்பு நாடுகளுக்கும் ஏற்படுத்தக்கூடியது. இவற்றை உணர்ந்த அமெரிக்க கூட்டுப்படைகளும், அமெரிக்க ஆட்சியும் ஈராக்கிடம் இடைக்கால அரசை வழங்கி நிலைமையை சமாதானப்படுத்த விரும்பியது.

ஆனால் நிலைமை மேலும் மோசமடைய ஆரம்பித்துள்ளமை பெரும் பின்னடைவாக இருக்கும் போது, உலக நாடுகளின் படைகளை அமெரிக்காவின் இராணுவத்திற்குப் பதிலாக நிறுத்த முடியாதுள்ள நிலைமை என்பன அமெரிக்காவுக்கு இக்கட்டான அரசியல் சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதிலிருந்து அமெரிக்காவை மீட்டெடுக்க சவுதிஅரேபியா முன்வைத்திருக்கும் புதிய முயற்சியே இஸ்லாமிய நாடுகளின் இராணுவம் என்பதாகும்.

சவுதி அரேபியா முன்வைத்திருக்கும் ‘இஸ்லாமிய நாடுகளின் இராணுவம்’ என்பது அதிக ஆபத்துக்களையும், நன்மைகளையும் கொண்டது. சவுதி அரேபியாவின் இத்தகைய அணுகுமுறை அமெரிக்காவுக்கு ஏற்பட்டு வரும் இழப்பீடுகளைச் சமப்படுத்த எடுத்த முயற்சியாகவே விளக்கப்படுகின்றது.

ஈராக்கில் ஏற்பட்டு வரும் நெருக்கடியைத் தீர்க்கவே இஸ்லாமிய இராணுவம் என சவுதியரேபியா தெளிவுபடுத்தியுள்ளது. அந்த வகையில் அமெரிக்கநலனை முதன்மைப்படுத்த விரும்பும் சவுதி அரேபியா- இஸ்லாமிய இராணுவத்தினூடாக இஸ்லாமிய உலகத்துக்குள்ளேயே கொலைகளையும், அழிவுகளையும் உள்வாங்கத் தயாராகின்றது. ஆதிக்க சக்திகளுக்கு முண்டுகொடுக்கும் சவுதி அரேபியா முழு மேற்காசியாவுக்குள்ளும் ஏற்பட்டுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தை அழிக்க விரும்புவதுடன், சவுதி அரேபியா போன்று முழுமேற்காசியாவையும் அமெரிக்காவின் அடிமையாக்க விரும்புகிறது. இஸ்லாமிய இராணுவம் என்பதும் ஒரு வகையில் அமெரிக்காவுக்கு இசைந்து போகின்ற இராணுவத்தையே உருவாக்க விரும்புவது அதன் முதற்கட்ட முயற்சிகளில் தெரியவந்துள்ளது.



சவுதி அரேபியா உருவாக்க திட்டமிட்ட இராணுவ அமைப்பை அதன் ஆரம்பகட்டத்திலே நெருக்கடிக்குள்ளாகிவிட்டது.

அதாவது, இஸ்லாமிய இராணுவத்தை அமைக்க- சவுதிஅரேபியா பல நாடுகளை நாடிய போதும் அனைத்து நாடுகளும் ஈராக்கில் பணிபுரியவோ, அமெரிக்காவின் ஈராக்மீதான ஆக்கிரமிப்பையோ ஏற்காத நாடுகளாகக் காணப்படுகின்றன. இதனால் சவுதி அரேபியா மட்டுமன்றி அமெரிக்காவே மாற்று வழியைத் தேடி பல முயற்சிகளில் இறங்கியுள்ளதாக தெரியவருகின்றது. ஆனால், இஸ்லாமிய நாடுகள் சுதந்திரமான இராணுவக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதில் அதிக அக்கறையும் கவனமும் கொண்டிருக்கின்றன என்பது அடிப்படைவாதத்திற்கோ அல்லது இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கோ அச்சுறுத்தலான விடயம் என்பதில் சந்தேகமில்லை.

எனவே இஸ்லாமிய இராணுவம் என்ற அமைப்பு அமெரிக்காவுக்கு சாதகமான, பாதகமான நிலையை ஏற்படுத்தும் என்பதை விட இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு ஆபத்தான விடயமாகவே மாறிவருகின்றது.

மேற்குலகின் ஜனநாயக மயப்படுத்தும் மந்திரமும், உலகமயப்படுத்தல் சுலோகத்திற்கு பின்னாலுள்ள சுதந்திரம் மனித உரிமைகளும் இஸ்லாமிய உலகத்தை ஆட்டங்காண வைத்துள்ளது. அல்லது அதற்கான சூழலை ஆரம்பித்துள்ளது. இதில் சவுதிஅரேபியாவுக்கு ஐம்பது வருடத்திற்கு மேற்பட்டகால அனுபவம் உண்டு. சவுதிஅரேபியாவிற்கும் அமெரிக்காவுக்குமான உறவு கடந்த ஐம்பது ஆண்டுகாலம் மிக ஆழமானதாக அதேநேரம் அதிக வெளிப்பாடற்றதாக அமைந்திருந்தது. எண்ணெய் வளத்தை அமெரிக்க சவுதிஅரேபியாவிடமிருந்தே அதிகம் பெற்று வருகின்றது. அவ்வாறே சவுதிஅரேபியாவும் அமெரிக்காவிடமிருந்தே தனது இராணுவ ஆயுத தளபாடங்களையும், உற்பத்திகளையும் உருவாக்கி வருகிறது. இராணுவ தளபாடங்களையும் மற்றும் உதவிகளையும் பெறுவதற்காக சவுதிஅரேபியா பலதடவை வேறு நாடுகளை அணுகுவதனூடாக அமெரிக்காவுடனான பேரம்பேசலை சாத்தியப்படுத்தியுள்ளது. குறிப்பாக பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இந்தியா என்பவற்றுடன் கொண்டிருந்த உறவினால் அமெரிக்க சவுதிஅரேபிய நெருக்கம் விரிவடைந்ததாகவே அமெரிக்கப் பேராசிரியர் இமானுவேல் வலரஸ்ரின் குறிப்பிடுகின்றார்.

அவர் இன்னோர் வலுவான காரணத்தையும் இங்கு காட்ட முயன்றுள்ளார்.

அமெரிக்க - சவுதிஅரேபிய உறவானது இஸ்ரேல் என்ற அரசினாலும் ஏற்பட்டதென கூறுகின்றார். அதாவது, புவிசார் அரசியலில் இஸ்ரேலுக்கு சவுதியரேபியா மிக முக்கிய இடத்தில் அமைந்திருப்பதனால் இஸ்ரேலின் தனித்துவத்தை பாதுகாக்கக்கூடிய நிலையில் சவுதி அரேபியா காணப்படுவதும் அதனால் அமெரிக்கா சவுதிஅரேபியா உறவு கூர்மையடைவதற்குக் காரணம் எனவும் அவர் மேலும் விபரிக்கின்றார்.

இதனால் சவுதிஅரேபியா மேற்காசியாவுக்குள் பலமான சக்தி படைத்த அரசாக வளர்ந்து வருவதாகவும், அதனை அமெரிக்கா வளர்த்து வருவதாகவும் தெரியவருகின்றது.

மேற்கு ஈராக் இல்லாத சூழலில் ஈரான் அமெரிக்க எதிர்ப்பு வாதத்தை அதிகம் கொண்டிருப்பதனால் மேற்காசியாவுக்கு அமெரிக்காவுக்கு பலமான சக்தியாகவும், மேற்காசியாவுக்குள் பலமான நாடாகவும் சவுதியரேபியா விளங்குகிறது.

எனவே, சவுதி அரேபியா முன்வைத்திருக்கின்ற இஸ்லாமிய இராணுவப்படை என்பது, சவுதி அரேபியாவுக்கு தனித்துவமான வலுவையும், மேற்காசியாவுக்குள் பலமான அரசியலையும் உருவாக்க வல்லது.



மேற்காசியாவின் கொதிநிலைக்குள் அகப்படாத சவுதி அரேபியா தனது நாட்டின்மீது தீவிரவாதம் ஊடுருவவிடாது தடுக்க பல பிரயத்தனத்தை மேற்கொள்வதுடன், ஊடுருவிய தீவிரவாத அமைப்புக்களை அழிப்பதில் அதிக சிரத்தை எடுத்து வருகின்றது. மிகப்பிந்திய காலத்தில் தீவிரவாதத்தின் ஊடுருவலை முறியடிக்க அமெரிக்க உதவியை, பயிற்சிகளைப் பெற்றதுடன் பகிரங்கமாகவே தண்டனையைச் சாத்தியப்படுத்தப் பிரயத்தனம் கொள்கின்றது.



இவை யாவும் சவுதியரேபியாவின் பிராந்திய மட்டத்தில் ஆதிக்க அரசாக மாறுகின்ற நோக்கத்தைக் கொண்ட நடவடிக்கையாகவே அமைந்துள்ளது. அமெரிக்காவின் பினபுறத்திலிருந்து சவுதி அரேபியாவைத தள்ளுகின்ற அரசாகக்காணப்படுவதுடன் சவுதி அரேபியா எழுச்சி பெறுவது அமெரிக்காவினதும்,இஸ்ரேலினது நலன்களுக்குப் பாதகமாக அமையாது எனக் கருதுகின்ற போக்கு அமெரிக்க நிர்வாகத்திடமும், புலனாய்வாளர்களிடமும் காணப்படுகின்றது. ஒட்டுமொத்தமான சவுதிஅரேபியாவின் வளர்ச்சியை விரும்புகின்ற அமெரிக்கா இஸ்ரேலுடனான உறவையும் முதன்மைப்படுத்தியும் நோக்குகின்றது.

எனவே, சவுதி அரேபியாவின் இஸ்லாமிய இராணுவப்படை என்பதற்கான அடிப்படைகள் அதன் பிராந்திய ஆதிக்கத்தை அல்லது வல்லரசு என்கின்ற கனவைக் கோடிட்டுக் காட்டுவதாகும். தெளிவான தூரநோக்கோடு நகரும் சவுதி அரேபியா முழுமையாக அமெரிக்க செல்வாக்குச் சக்தியாக மாறிவிட்டது.

இஸ்லாமிய எதிர்ப்பு வாதத்தை முன்னிறுத்திச் செயற்படும் சவுதியரேபியாவை எதிர்காலத்தில் பின்லேடன் பெரும் அச்சுறுத்தலுக்குரிய நாடாக்குவார் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வகையான அச்சுறுத்தலை சவுதி அரேபியா முறியடிக்க முயன்று வெற்றி பெறுமாயின் ஈராக் விட்டுச்சென்ற வெற்றிடத்தை நிரப்பும் நாடாக சவுதி அரேபியாவே காணப்படும். ஆனால், சவுதிஅரேபியா அமெரிக்க சார்பிலிருந்து முழு மேற்காசியாவையும் நிர்வகிக்கும் நாடாகத்திகழும்.

இஸ்லாமிய அடிப்படை வாதமும், இஸ்லாமிய இராணுவப் படையும் ஒன்றான பரிமாணத்தையே மேற்காசியாவுக்குள் ஏற்படுத்தக் கூடியதாக விளங்கும் என்பது ஈராக்கிலுள்ள கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களிலிருந்து புரிந்துகொள்ளலாம். சவுதி அரேபியா முன்னெடுத்த முயற்சி ஆரம்பகட்டத்தில் முறியடிக்கப்பட்டாலும், அமெரிக்கா அவ்வாறே மேற்காசிய அரசியலை நகர்த்த விரும்புகின்றது என்பதை அவ்விடயம் வெளிப்படையாக உணர்த்துகின்றது.

**இஸ்லாமிய எதிர்ப்பு வாதத்தை முன்னிறுத்திச் செயற்படும் சவுதி யரேபியாவை எதிர்காலத்தில் பின்லேடன் பெரும் அச்சுறுத்தலுக் குரிய நாடாக்குவார் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

**இவ்வகையான அச்சுறுத்தலை சவுதி அரேபியா முறியடிக்க முயன்று வெற்றி பெறுமாயின் ஈராக் விட்டுச்சென்ற வெற்றிடத்தை நிரப்பும் நாடாக சவுதி அரேபியாவே காணப்படும். ஆனால், சவுதிஅரேபியா அமெரிக்க சார்பிலிருந்து முழு மேற்காசியா வையும் நிர்வகிக்கும் நாடாகத்தி கழும்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பகைநட்புஆம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல்

திருக்குறள்

# நமது நோக்கு

## அதிகார அரசியலும்....... அரசியல் திருப்பங்களும்....

பழையபடி மீண்டும் ஜனாதிபதிக்கும், ஜே.வி.பிக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக - இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவது குறித்து சில நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இது தொடர்பான முயற்சிகளில் திரைமறைவில் சில சக்தி களும், வெளிப்படையாகச் சிலரும் இரு முனைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளதாகவும், விரைவில்- ஜனாதிபதி தனது வெளி நாட்டுப் பயணத்திலிருந்து திரும்பியதும், இந்த விடயத்தில் இரு தரப்பினரிடையேயும் ஒரு பொதுவான கொள்கை அடிப்படையில் இணக்கம் ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும், இன்னும் ஓரிரு வாரங்களில் இது குறித்த அறிவிப்பு வரக்கூடும் எனவும், அரச வட்டாரங்ளை மேற்கோள் காட்டும் செய்திகள் உணர்த்து கின்றன.

சமாதான முன்னெடுப்புத் தொடர்பான ஜே.வி.பியினர் எடுத் துள்ள நிலைப்பாடு அரசின் ஸ்திரத் தன்மைக்கும் - ஜனாதி பதிக்கும் அச்சுறுத்தலாக இருப்பதுடன், அமைதி முயற்சிகள் முற்றாக முறிவடைந்து, மீண்டுமொரு யுத்த காண்டம் ஏற்படுவதற் கான ஆபத்தான சூழலை உருவாக்கி வருகின்றமையானது - பேரினவாத வெறியர்கள் தவிர்ந்த ஏனைய தென்பகுதி பௌத்த சிங்கள அமைதியை விரும்பும் மக்களாலும், சர்வதேச சமூகத் தாலும் கடும் விமர்சனத்துடன் நோக்கப்படும் நிலையை தோற்று வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது அரசுக்கு, குறிப்பாக ஜனாதிபதிக்கு கடுமையான நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன், பல்வேறுபட்ட புற அழுத்தங்களையும் அதிகரிக்கச் செய்துள்ளது. ஆனாலும் ஜே.வி.பியினர் தமது பிடிவாதக் குணத்தைக் கைவிடுவதாக இல்லை. தொடர்ந்தும் தனது அரசின் பலவீனமான நிலையைப் பயன்படுத்தி, தமது ஆதிக்க வலுவை அரசுக்குள் செலுத்தி ஆட்சியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் மூலம், தமது அரசியல் இலக்குகளை எதிர்காலத்தில் அடைய ஜே.வி.பி தனது நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது என்பதும் ஜனா திபதிக்கு நன்கு தெரியும். ஆனாலும், ஜே.வி.பியினருக்கு அறிவுறுத்தல் செய்யவோ, கண்டிக்கவோ ஜனாதிபதிக்கு தற்போதைய நிலையில் துணிச்சலில்லை என்றே கூறவேண்டும்.

தற்போதைய நிலையில் சமாதான முன்னெடுப்பின் அவசியம் குறித்து ஜனாதிபதி நன்கு அறிவார். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுவரும் நிலையில், சர்வதேச சமூகத்தின் கடன் மற்றும் ஏனைய வகையிலான நிதி உதவிகள் இல்லாது ஆட் சியைத் தொடர்வது எவ்வகையிலும் முடியாத காரியமென்பது நாடறிந்த உண்மையாக இருக்கையில், ஜனாதிபதி - விரும்பியோ, விரும்பாமலோ விடுதலைப்புலிகளுடனான அமைதிப்பேச்சுக்களை இடைநிறுத்தப்பட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டிய அவசி யத்தை சர்வதேச சமூகம் மிகத் தெளிவாக வலியுறுத்துவதை அவரால் புறக்கணித்தல் சாத்தியமில்லை, அது புத்திசாலித் தனமுமில்லை.

ஐ.தே.முன்னணி அரசை பதவி நீக்கம் செய்யவேண்டும், தனது கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சியைக் கொணடுவரவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக சமாதான முயற்சிகளை அப்போது நிரா கரித்து ஆட்சிக்கலைப்பை மேற்கொண்ட ஜனாதிபதி, அதே காரணத்திற்காகவே ஜே.வி.பியுடன் கூட்டணியும் அமைத்துக் கொண்டார்.

ஆனாலும், தேர்தலில் அவர் எதிர்பார்த்த பெரும்பான்மைப் பலம் அவருக்குக் கிடைக்கவில்லை. அத்துடன், அவர் எதிர் பார்த்த அளவிலும் அதிகப்படியாக ஜே.வி.பி தன்பலத்தைக் கூட்டணிக்குள் அதிகரித்துக் கொள்ள இடம் கொடுத்தவராகவும் அவர் ஆகிவிட்டார்.

இதன் எதிரொலியே அவர் இன்று அனுபவிக்கப் போகும் கஷ்டங்களாகும்.

சமாதான முயற்சிகளை இடைக்கால நிர்வாக அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பிக்க, ஜனாதிபதி உடன் பட்டாலும் ஜே.வி.பி அதற்கு அனுமதி வழங்கப் போவது கிடையாது. இந்த நிலையில், ஜே.வி.பியின் இந்தப் போக்கை தொடரவிடுதலும் தனக்கு ஆபத்து என்பதையும் அவர் உணரத் தொடங்கியுள்ளார் என்பதையே, ஜே.வி.பியினருக்கு வழங்கிய அமைச்சுக்களில் சில மாற்றங்களை ஏற்படுத்திய நிகழ்வு உணர்த் துவதாகவுள்ளது.

இது ஜே.வி.பிக்கு சீற்றத்தை உண்டு பண்ண வேண்டுமென்றே அவர் எடுத்த நடவடிக்கையென்றே கூறவேண்டும்.

இந்த நிலையில், ஜனாதிபதி ஜே.வி.பியை அடக்க அல்லது சமாளிக்க மாற்று வழிகளை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டு விட்டாரென்றே கூறவேண்டும்.

இந்த நிலையில் தான் சமாதான முன்னெடுப்புக்கு - அதுவும் இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையிலிருந்து அதனைத் தொடர்வதற்கு, அரசுக்கு நிபந்தனைகளற்ற முழுமை யான ஆதரவை எதிர்க்கட்சி வழங்குவதற்கு பகிரங்கமாக முன் வைத்துள்ளமையானது, இலங்கை அரசியலில் ஒரு புதிய மாற் றத்தை அல்லது குழப்பத்தை உண்டுபண்ணப் போகிறது என்றே கூறவேண்டும்.

ஜே.வி.பி எந்த வகையிலும் இத்தகையதோர் வெடிகுண்டை ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து எதிர்பார்க்கவே இல்லை... ஜனாதிபதியும்தான்.

இப்போது ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்து சமாதான முயற்சிகளைத் தொடர அவர் விரும்புவதாகவும் - அதில் அவர் கூடிய அக்கறை கொண்டுள்ளதுடன் முன்னர் ஐ.தே.முன்னணி அரசில் ஏற்படுத்தப்பட்ட மனோ - மலிக் குழுவினரின் இது தொடர்பான பேச்சுக்களை மீள ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் செய்திகள் வந்துள்ளன.


இது உண்மையானால், இது ஜே.வி.பிக்கு விழப்போகும் பேரிடியாகக் கருத வாய்ப்புண்டு என்பதில் ஐயமில்லை.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி தரப்பும், எதிர்க்கட்சித் தரப்பும் அடுத்தவாரத்தில் கலந்துரையாடப் போவதாகவும் கூறப் படுகிறது.

இந்த நிலையில், ஜே.வி.பியின் அடுத்த நகர்வு எதுவாக இருக்கும்? ஆட்சியிலிருந்து விலகுமா ? அடங்கிப் போகுமா ?

அடுத்துவரும் வாரங்கள் அரசியல் முக்கியத்துவம் மிக்க வையாகவே இருக்கும்.

# நாடும் நடப்பும்




### தமிழ் சமுதாயத்தை கூறுபோடும்

## சமூக அநீதிகள் தலைதூக்குவதற்கு அறவழிப் போராட்டக்குழு கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்து தமிழ் சமூகம் தலைநிமிர்ந்து வாழும் நிலை நோக்கி நகர்கின்ற வேளை யில் மீண்டும் தமிழ் சமுதாயத்தைக் கூறுபோடுகின்ற வகையில் கடந்த இரு தசாப்தங்களாக மறைந்திருந்த சமூக அநீதிகள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் மீண்டும் ஆங்காங்கே தலை தூக்கும் நிகழ்வுகளை சமுதாயமாற்ற நிறுவனமாகிய அறவ ழிப் போராட்டக் குழுவும் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அறவழிப் போராட்டக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது-

சைவ ஆலயங்களில் மீண்டும் பலியிடுதல், சிறப்பாக அரங்கேறி வருகின்றமையும் அதற்கு சமுதாயத்தில் வாழ்கின்ற ஒரு சில வர்க்கத்தினர் ஆதரவளித்து வருவது குறித்தும், நாம் ஆழ்ந்த கவலை கொள்கின்றோம். தமிழ் சமுதாயம் வெட்கப்படவேண்டிய இத்தகைய சமூக அநீதியான நிகழ்வு களை மக்கள் நிராகரிக்க முன்வரவேண்டும்.

அதேபோல், யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள ஒரு சில இந்து ஆலயங்களில் சமத்துவ வழிபாட்டிற்கு மறுப்புத் தெரிவிப்ப தும், பூஜை, பொங்கல்கள் செய்யும் பக்தர்களுக்கு இடையூறு விளைவித்து அவமதிப்பு ஏற்படுத்துவதும், ஆலய தொண்டுப் பணிகளில் ஈடுபடுவதைத் தடுப்பதும் பாரதூரமான மனித உரிமை மறுப்பாகும்.

இத்தகைய நிலைகள் மீண்டும் தலைதூக்கக் கூடாது. பக்கச் சார்பற்ற நிலையில் அனைவரது மனித உரிமைகளும் பேணப்படுவதுடன், மதிக்கப்படவும் வேண்டும் என எமது குழு வேண்டிக்கொள்கின்றது.

யாழ். குடாநாட்டு மக்கள் தமது அழிந்த இருப்பிடங்களை புனரமைத்து புதிய வாழ்வை முன்னெடுக்க அரச அதிகாரிகள் உதவிபுரிய வேண்டியது முக்கியமானதாகும் எனவும் அற வழிப்போராட்டக்குழு வலியுறுத்தியுள்ளது.

## நெடுந்தீவு தபாலக வளாகத்தில் கடற்படையினர் முகாம் அமைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதம தபாலக வளாகத்தில் கடற்படையினர் முகாமமைத்து நிலைகொண்டுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச மற்றும் வட பிராந்திய தபாலகங்களில் உரிய அதிகாரிகளின் அனுமதியின்றியே இம்முகாம் அமைக் கப்பட்டுள்ளதுடன், தபாலகம் அமைந்துள்ள கட்டடத்தின் தென் முனையோரமாக முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு முட்கம்பிச் சுருள்களும் போடப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்புக்கென அமைக்கப்பட்ட முட்கம்பி வேலியை தபாலகத்தில் ஒரு பக்க அறையை மூடி அமைந் துள்ளமையினால் தபாலகத்தினர் அந்த அறையைப் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்த முகாமமைக்கப்பட்டமை தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு நெடுந்தீவு பொது அமைப்புகள் வழங்கிய முறைப்பாட்டிற்கமைய, கண்காணிப்புக்குழுவினர் நெடுந்தீவுக்கு வந்து முகாமைப்பார்வையிட்டுச் சென்றுள்ள துடன், பிரதம தபாலதிபரையும் சந்தித்து இதுதொடர்பான விபரங்களை எடுத்துச்சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(113)

## நெடுந்தீவு பிரதம தபாலகத்திற்கு புதிய தொலைபேசி இணைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதம தபாலகத்திற்கு நீண்ட காலத்தின் பின் னர் புதிய தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதுமக்கள் இத்தொலைபேசி இணைப்பைப் பயன்படுத்தி தொடர்புகளை மேற்கொள்ள முடியாத வகை யில், நெடுந்தீவில் உள்ள தனியார் தொலைத் தொடர்பு நிலை யங்களின் கட்டணத்தை விடவும் தபாலக தொலைபேசி கட்ட ணம் அதிகமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அவசர தேவைகளுக்கு தந்தி அனுப்பக்கூடிய வசதியும் செய்யப்படவில்லை என்பதுடன், இது தொடர்பான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக தெரியவருகின்றது.

(113)

## நெடுந்தீவில் சைக்கிள் உரிமம் பொலிஸாரால் பரிசோதனை

(நெடுந்தீவு)

2004ஆம் ஆண்டுக்குரிய சைக்கிள் வண்டிகளுக்கான உரிமம் கடந்த வாரம் முதல் நெடுந்தீவில் பொலிஸாரால் பரிசோதிக் கப்பட்டு வருகின்றது.

ஏற்கெனவே, நெடுந்தீவுப் பிரதேச சபையினரால் பொது அறிவித்தல் இடப்பட்டு, காலக்கெடுவும் விதிக்கப்பட்டபோதும் பலர் இதுவரை சைக்கிளுக்குரிய உரிமததைப் பெற்றுக்கொள்ள வில்லை.

இதேவேளை, பொலிஸாரின் இந்த திடீர் நடவடிக்கை யினால் நூற்றுக்கு மேற்பட்ட துவிச்சக்கரவண்டிகளுக்கான உரிமங்கள் பிரதேச சபையில் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

(113)

## விளக்கு சஞ்சிகையின் ஏற்பாட்டில் ஆசிரியர்களிடையே போட்டிகள்

விளக்கு சஞ்சிகையின் ஏற்பாட்டில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விபுலாநந்தர் நினை வாக எழுத்தாக்க போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மகாணத்தை சேர் ந்த ஆசிரியர்களிடையே கட்டுரை, சிறுகதை, கவிதை, விமர் சனம் ஆகிய போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய போட்டிகளில் பங்கு பற்றி முதலாம் இடம் பெறுபவருக்கு 15ஆயிரம் ரூபாவும், இரண் டாம் இடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு பரிசாக 5 ஆயிரம் ரூபாவும் பணப் பரிசாக வழங்கப்படவுள்ளது.

விமர்சனம் எழுதுதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்தைப் பெறு பவருக்கு 3 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்தைப் பெறுபவ ருக்கு 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, தெரிவு செய்யப்படும் தரமான ஆக்கங்களை விளக்கு சஞ்சிகையில் பிரசுரிப்பதோடு, அவர்களுக்கு சான்றிதழ் களும் வழங்கப்படவுள்ளன.

(தீ)

## இலங்கையர்களை ஈராக்கிற்கு அனுப்புவதற்குத் தடை

### தொழில் அமைச்சர் தெரிவிப்பு

வேலைவாய்ப்புக்காக இலங்கையர்களை ஈராக்கிற்கு அனுப்ப வேண்டாம் என தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்தின வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்கும் முகவர் நிலையங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

தமது இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாது இளைஞர், யுவதிகளை ஈராக்கிற்கு அனுப்பும் முகவர் நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.




# கண்டாவளையில் சிறப்பாக நடைபெற்ற புலிகளின் குரல் முத்தமிழ் கலையரங்கம்

(கிளிநொச்சி)

புலிகளின் குரலின் மாதாந்த முத்தமிழ்க் கலையரங்கம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளையில் சிறப்பாக நடைபெற்றது.

விசுவமடுப் பிரதேச அரசியல்துறையின் ஆதரவில் புலிகளின் குரலின் விசுவமடு வானொலி மன்றத்தினால் நடத்தப்பட்ட இந்தக் கலையரங்கு கண்டாவளை மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமானது.

முன்னதாக பொதுச்சுடர்களை காவல் துறை மாவீரர் பாஸ்கரன், மாவீரர் லெப்.றூபன் ஆகியோரின் தந்தையார் துரைசிங்கம், மாவீரர் வீரவேங்கை ரஞ்சனின் தாயார் லக்சுமி, மாவீரர் வீரவேங்கை வேதாவின் தாயார் தெய்வானை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையை வானொலிமன்ற நிர்வாக உறுப்பினர் ந.இந்துஜா நிகழ்த்தினார். தொடர்ந்து வரவேற்பு நடனமும், மாவீரர் வணக்க நடனமும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வை அடுத்து நாகதம்பிரான் ஆலயக்குருக்கள் ஸ்ரீ சிவலோகநாதக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து கண்டாவளை மகாவித்தியாலய அதிபர் ஸ்ரீதரன் உரையாற்றினார். இதனை அடுத்து கண்டாவளை மகாவித்தியாலய மாணவர்கள் வழங்கிய "பள்ளிக்கு அனுப்புங்கள்" என்ற சிறுவர் நாடகம் இடம்பெற்றது.

சிறுவர் நாடகத்தைத் தொடர்ந்து ஜனனியின் பாடலரங்கம் இடம்பெற்றது. பிரபாசுதனின் தனி நடிப்பும் இடம்பெற்றது.

சிறப்புரையை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட முரசுமோட்டை முருகானந்தா ம.வி. மாணவர்களின் "தீபதோரணம்" நாடகம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் புலிகளின் குரலின் படைப்பாளரும், அறிவிப்பாளருமான கவிஞர் பொன் காந்தன் அறிமுக உரை நிகழத்தினார். அதனை அடுத்து ஆசிரியர் இரங்கநாதன் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெற்றது. அதற்கு அடுத்ததாக பேபி ஆசிரியையின் நெறியாள்கையில் உருவான "சங்கநாதம்" இடம்பெற்றது.

நிகழ்வில் இறுதியாக பெருமாள் புண்ணியராஜ் குழுவினரின் "வழிகாட்டி" வில்லிசை இடம்பெற்றது.

முத்தமிழ்க் கலையரங்க நிகழ்வில் பங்காற்றியவர்களுக்கான புலிகளின் குரலின் பாராட்டுச் சான்றிதழ்களை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், புலிகளின் குரல் நிறுவனத் துணைப்பொறுப்பாளர் செயல்வீரன், மகளிர் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் வசந்தி ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (பா,இ)

## அக்கராயன் பாலம் புனரமைப்பு

(ஸ்கந்தபுரம்)

அக்கராயன் பிரதேச அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் ஸ்கந்தபுரம் பகுதியில் பொதுமக்களால் பாலம் ஒன்று சிரமதானப் பணிமூலம் புனரமைக்கப்பட்டது.

நீண்ட காலமாக போக்குவரத்துக்கு பெரும் சிரமத்தை எதிர்கொண்ட இந்தப் பகுதி மக்கள் இதனால் பயனடைந்துள்ளனர். (கௌ)

## பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய கற்கைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள பெண்கள் தொழில் பயிற்சி நிலையத்தில் புதிய கற்கை நெறிகள் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இலத்திரனியல் பயிற்சி (11 மாதம்), மரவேலைப் பயிற்சி (11 மாதம்), கைப்பணிப பயிற்சி (2 மாதம்) ஆகிய பயிற்சிநெறிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்குத் தெரிவான அனைவரையும் இன்று தொழிற்பயிற்சி நிலையத்துக்கு சமூகமளிக்குமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (கௌ)

## - இரணைமடு குளத்திலிருந்து -
# சிறுபோகத்துக்கு போதிய நீரின்றி பயிர்ச் செய்கைகள் பாதிக்கும் அபாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்கள ஒதுக்கீட்டுக்கு மேலாக இரணைமடு நீர்த்தேக்கத்தின் மூலம் சிறுபோக பயிர்ச்செய்கையினை மேற்கொண்டுள்ள விவசாயிகள் போதிய நீர் இன்றி பாதிப்புக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் இரணைமடுக் குளத்திலிருந்து, இந்த ஆண்டுக்குரிய சிறுபோக பயிர்ச்செய்கைத் திட்டத்தின் கீழ் 6,765 ஏக்கர் விவசாய நிலத்துக்கு நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு மேலதிகமாகவும் விவசாயிகளால் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதால், கமக்கார அமைப்புத் திட்டக்குழுவினர் மேலதிக பயிர்ச்செய்கை நிலப்பரப்புக்குத் தேவையான நீரை வழங்கி வந்தனர்.

ஆனால், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டின் அடிப்படையில் 6,765 ஏக்கர் நிலப்பரப்புக்கு மட்டுமே நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மேலதிகமான பயிர்ச்செய்கை நிலப்பரப்புக்கு வழங்கினால், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட ஏக்கருக்கும் நீர் வழங்குவதில் பாதிப்புக்கள் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், மேலதிக நிலப்பரப்புகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (பா)

## முல்லை.அரசினர் பாடசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயம்

முல்லைத்தீவு கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் நேற்று முன்தினம் அங்கு விஜயம் செய்தார்.

இவர் மேற்படி பாடசாலையின் அதிபரைச் சந்தித்து பாடசாலையின் தற்போதைய நிலை தொடர்பாகவும், அங்கு ஏற்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாவும் கலந்துரையாடியதுடன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.(பா)

# கனகபுரம் சீர்திருத்தப் பிரிவினை செஞ்சிலுவைக்குழு பார்வையிட்டது

(கனகபுரம்)

கடந்த 28ஆம், 29ஆம் திகதிகளில் கிளிநொச்சி கனகபுரம் சீர்திருத்தப் பிரிவுக்குச் சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தண்டனையில் உள்ளவர்கள் மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களைத் தனித் தனியாகச் சந்தித்து அங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

அதன்பின்பு மல்லாவி வதிவிட, புதிய பிரதிநிதி ஸ்சிரசா பாமா, பாதுகாப்புப் பிரிவு அதிகாரி பமிலா, பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர் டங்கன் ஆகியோர் சீர்திருத்தப் பிரிவு பொறுப்பாளர் நரேன், தமிழீழ காவல் துறைப் பிரதம பரிசோதகர் குணரட்னம், கனகபுரம் சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர் சுதர்சன் ஆகியோருடன் கலந்துரையாடியதுடன், தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை மனிதாபிமான அடிப்படையில் பேணி வருகின்றமைக்காகப் பாராட்டும் தெரிவித்தனர்.

# இராணுவத்தால் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன

இராணுவத்தினரால் மிதிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசங்கள் சில இனங்காணப்பட்டு அவற்றை அகற்றும் பணியை மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி சூடுவிழுந்தான்குளம் 17 ஆம் கட்டை, நம்பைக்குளம் 6 ஆம் கட்டை ஆகிய பிரதேசங்களை சூழவுள்ள சில இடங்கள் இனங்காணப்பட்டு வெடிபொருட்கள் அகற்றப்பட்டு வருகிறது.

இதேவேளை, நெடுங்கேணிப் பிரதேசத்தில் வெண்புறா நிறுவனத்தால் மிதிவெடி விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

## சிறப்பாக நடைபெற்ற முன்பள்ளி விளையாட்டு விழா

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சில்வா வீதியில் கரைச்சி பிரதேச சபையால் நடத்தப்பட்டுவரும் 'தூயமணி' முன்பள்ளி பாடசாலை சிறார்களின் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

முன்பள்ளியின் பெற்றோர் சங்கத் தலைவர் எஸ்.இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டு விழாவில்-

மங்கள விளக்கை பிரதேச செயலர் பொன் நித்தியானந்தம், கிராம அலுவலர் ஜோன் ஜெகநாதன், பிரதேசசபை உதவி இணைப்பாளர் கே.மணிமேகலை, ஆசிரியை ஜனனி ஆகியோர் ஏற்றினர்.

தேசியக் கொடியை பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம், கல்வி மேம்பாட்டுக் கொடியை யோ. நிலாவும் ஏற்றிவைத்தனர். பாடசாலைக் கொடியை ஆசிரியை ஜனனி ஏற்றிவைத்தார்.



## - புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் -
# கணினி செய்முறைப் பயிற்சியை மேற்கொள்வதில் நெருக்கடி நிலை
## கவலை தெரிவிக்கிறார் பாடசாலை அதிபர்

(புதுக்குடியிருப்பு)

முந்நூறுக்கும் அதிகமான உயர்தர வகுப்பு மாணவர்கள் கற்கும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்துக்கு நான்கு கணினிகள் மட்டுமே வழங்கப்பட்டிருப்பதால், மாணவருக்கு போதியளவு கணினி வகுப்புக்களை நடத்த முடியாதிருப்பதாக பாடசாலை அதிபர் பி.கே.சிவலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கணினிக் கற்கை நெறிகளை மாணவர்கள் மேற்கொள்வதற்கான வகுப்பறைகள் அமைத்துக் கொடுக்கப்படாமையால், கணினியில் செயல்முறைப் பயிற்சிகளை மேற்கொள்வதில் மாணவர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

பாடசாலைக்கான நிர்வாக அலுவலகம், மனைப் பொருளியல் வகுப்பறை, பொது மண்டபம் என்பன இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

நிரந்தரப் பாடசாலைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும், அந்தக் கட்டடங்கள் ஆரம்ப பாடசாலைகளுக்கு அமைக்கப்படும் கட்டடங்களின் தரத்திலேயே அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.


இரண்டு அரை நிரந்தரக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்றும், பாடசாலைக்கான ஆய்வுகூட வசதி மூன்றில் இரண்டு பங்கே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அத்துடன், போதிய அளவில் மலசலகூட வசதிகளும் செய்து கொடுக கப்படவில்லை.

யுத்த அனர்த்தங்களின் போது, பல நெருக்கடிகளை எதிர்கொண்டு மாவட்ட ரீதியாக முன்னணியில் செயற்பட்டு வந்த இந்தப் பாடசாலைக்கு போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு இரண்டரை ஆண்டுகளை எட்டியுள்ள நிலையிலும் இதுவரை முழுமையான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் அவர் கவலை தெரிவித்தார். (தி)



வீதி ஒழுங்குகள் குறித்து துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கும் பணியில்தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவினர் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். படம்: ரமணன்

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்; 2 பொலிஸார் உட்பட நால்வர் பலி!



(பாக்தாத்)

ஈராக்கின் மொசூல் நகரிலுள்ள பொலிஸ் நிலையத்தை இலக்குவைத்து நடத்தப்பட்ட, கார்க் குண்டுத் தற்கொலைத தாக்குதலில் - இரண்டு பொதுமக்கள், இரண்டு ஈராக்கியப் பொலிஸாரென நால்வர் கொல்லப்பட்டதுடன், 30 பேர் காயமடைந்தனர்.

நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

மொசூல் நகரிலுள்ள பொலிஸ் நிலையத்தை நோக்கி, தற்கொலைக் குண்டுதாரி வாகனத்தைச் செலுத்திவந்ததாகவும் அவ்வேளை அந்த வாகனத்தின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது, வாகனம் வெடித்துச் சிதறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடந்தவேளை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் நின்ற இரண்டு பொலிஸாரும், இரண்டு பொதுமக்களும் கொல்லப்பட்டதுடன், 30 பேர் வரை காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பலர் பொலிஸாரெனவும் உயிரிழப்பு வீதம் மேலும் அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, பலூஜா நகரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வன்செயல்களில் பத்து ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதுடன், 36 பேர் காயமடைந்தனர்.

பலூஜா நகரில் கடந்த சிலநாட்களாக தாம் நடத்திய தாக்குதலில், 20 கிளர்ச்சியாளர்களைக் கொன்றதாக அமெரிக்கப் படையினர் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

## நாய்களுக்கு அழகு நிலையம்



சீன மக்கள் வீட்டில் நாய்களை விரும்பி வளர்த்து வருகிறார்கள். நாய்களுக்கு வர்ணம் பூசி அழகுபடுத்தவும் ஆசைப்படுகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து சீனாவின் பல்வேறு இடங்களில் நாய்களுக்காக அழகு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு நாய்களின் முடி வெட்டப்பட்டு, உரிமையாளர் விருப்பப்படும் வர்ணம் பூசி-அழகுபடுத்திக் கொடுக்கிறார்கள்.

## போர்க் குற்றவாளிகளை

# பொஸ்னிய அரசு கைது செய்யாமைக்கு கொலின்பவல் கடும் கண்டனம் தெரிவிப்பு!



(சரஜிவோ)

பொஸ்னியா போர்க் குற்றவாளிகளைக் கைது செய்து சர்வதேச நீதிமன்றில் ஒப்படைப்பதில் தொடர்ந்தும் தோல்வியடைந்து வருவதானது, அந்த நாடு எதிர்காலத்தில் பல சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுமென அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் நான்கு மணி நேர விஜயமாக பொஸ்னியத் தலைநகரான சரஜிவோவுக்கு விஜயத்தை மேற்கொண்ட பவல் - அங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பொஸ்னிய சேர்பியாவின் முன்னாள் தலைவர் ரதோவன் கராடிஸ்ஸை - தற்போதைய அரசாங்கம் கைது செய்வது தாமதமடைந்து வருவதனால், அந்த நாடு நேட்டோ மற்றும் ஐரோப்பிய யூனியன் போன்றவற்றில் இணைவது தாமதமாகி வருகிறது.

இந்தப் போர்க்குற்றவாளிகள் ஒரு வருடத்துக்கு முன்னரே கைது செய்யப்பட்டுச் சர்வதேச நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பவல் தெரிவித்தார்.

அத்துடன், ஈராக்கில் கண்ணி வெடிகளை அகற்ற நிபுணத்துவம் வாய்ந்த படையினரை பொஸ்னியா அனுப்ப உறுதியளித்தமைக்கும் பவல் தனது நன்றியைத் தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் நடந்த தாக்குதல்; அல்கொய்டா பொறுப்பேற்றது

(பாகிஸ்தான்)

பாகிஸ்தானில் பிரதமர் பதவியேற்கவிருக்கும் நிதி அமைச்சர் சவுகத் அஜீஸ் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்று விட்டு திரும்பிச் சென்றுகொண்டிருந்த வேளை, அவரைக் கொல்ல மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் சவுகத் அஜீஸ் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார். ஆனால், அவரது கார்ச் சாரதி, மனித வெடிகுண்டு தாரி உட்பட எட்டுப் பேர் பலியானார்கள். 50 பேர் படுகாயமடைந்தனர்.

மனித வெடிகுண்டாக வந்தவரின் முகம் மற்றும் உடல் சிதறியிருந்ததால், இந்தத் தாக்குதலில் ஈடுபட்டது யார் என்பது இதுவரை தெரியாமல் இருந்தது. தற்போது அல்கொய்டா அமைப்பு இதற்குப் பொறுப்பேற்றுள்ளது.

இது தொடர்பாக அல்கொய்டா அமைப்பு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

அமெரிக்காவின் கட்டளையை ஏற்று பணி செய்யப்போகும் தலைவரை எங்கள் இயக்க உறுப்பினர் கொல்ல முயன்றார். ஆனால், அவர் உயிருடன் இருக்க வேண்டுமென்று கடவுள் விரும்பியதால் பிழைத்துவிட்டார். புஷ்ஷுக்கு பணி செய்வதை அவர்கள் நிறுத்தும்வரை எங்கள் தாக்குதலை நிறுத்த மாட்டோம் என அதில் கூறப்பட்டுள்ளது.

# சாட்டின் கிழக்கு எல்லைப் பகுதிகளுக்கு பிரான்ஸின் 200 படையினர் சென்றனர்



(டாபூர்)

சூடானின் டர்பூர் பிரதேசத்தில் நிலவும் வன்செயல்களை அடுத்து, சூடானின் எல்லைப் பகுதியுடன் இணைந்ததான சாட் நாட்டின் கிழக்குப் பகுதிக்கு - பிரான்ஸ் நாட்டின் 200 படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனா.

டர்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து சாட்டில் தங்கியுள்ள ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகளுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கே பிரான்ஸ் துருப்பினர் சாட்டுக்கு வந்துள்ளதாக, சாட்டிலுள்ள பிரான்ஸ் தூதுவர் பேகொட் தெரிவித்தார்.

சாட்டில் ஏற்கனவே 1000 துருப்பினர் நிலை கொண்டுள்ளனர். இவர்கள் சாட் நாட்டின் ஸ்திரத்தன்மையை பேணுவதுடன், சமாதானப் பணிகளில் ஈடுபடுவதற்காக சாட் படையினருக்கு பயிற்சியும் அளித்து வருகின்றனர்.

சாட்டின் கிழக்குப் பகுதி எல்லையில் எமது 200 படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் சூடானிலிருந்து இடம்பெயர்ந்து வருபவர்களுக்கு உதவி செய்வதற்கும் மற்றும் நிலைமைகளைக் கவனிப்பதற்கும் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக பிரான்ஸ் தூதுவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

பிரான்ஸ் துருப்பினர் சாட்டில் நிலைமைகளை அவதானிக்கவும், எல்லைப் பகுதிகளில் உதவிப் பணிகளை மேற்கொள்ளவும்- பிரான்ஸ் அரசும், ஜனாதிபதி ஷிராக்கும் விரும்பியதற்கு இணங்கவே படையினர் இங்கு வந்துள்ளனர்.

அத்துடன், பிரான்ஸ் துருப்பினர் - ஜான் ஜாவீட் கிளர்ச்சியாளர்களுடன் மோதுவது தொடர்பாகக் கேட்டபொழுது -

தற்பொழுது எமது படையினர் சாட்டின் எல்லைப் பகுதியிலேயே நிலை கொண்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - சில வரையறைகள் இருந்தபோதிலும், ஐ.நாவின் திட்டத்துக்கு அமைய ஆயுததாரிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் சூடான் அரசாங்கம் ஈடுபடுமென சூடான் அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சூடானிய அமைச்சரவை இறுதி முடிவெடுப்பதற்காக நேற்றுக் கூடி ஆராயவிருந்ததாக, சூடானிய வெளியுறவு அமைச்சர் முஸ்தபா ஒஸ்மான் இஸ்மெயில் தெரிவித்தார்.

# 2008 இல் தாய்வானை சீனா தாக்குமாம்

(சீனா)

தாய்வான் சுதந்திரத் தனிநாடு என்பதை உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசியல் சட்டத்தை 2008 ஆம் ஆண்டு கொண்டுவரவுள்ளது. இந்தப் புதிய அரசியல் சட்டத்தை கொண்டுவருவதில் தாய்வான் பிடிவாதமாக இருந்தால், அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்துவோம் என்று சீனா எச்சரித்துள்ளது.

தாய்வான் நீர்மூழ்க்கிக் கப்பல்களையும், ஆயுதங்களையும் வாங்கிக் குவித்து வருகிறது. அதன் பாதுகாப்பு ஆயுதங்களில் இல்லை, சீனாவின் ஒரு அங்கம்தான் தாய்வான் என்று உறுதிமொழி அளிப்பதில்தான் இருக்கிறது. என்று சீன அமைச்சர் வாங்க் சைஜி கூறியிருக்கிறார்.

2008 ஆம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் கொண்டுவருவது தனிநாடு பிரகடனத்துக்கு இணையானது என்றும் அவர் கூறினார்.

# துருக்கி நாட்டு சாரதிகள் இருவர் ஈராக்கில் வைத்து கடத்தப்பட்டனர்

ஈராக் நாட்டில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டு இருக்கும் அமெரிக்க கூட்டுப்படை மற்றும் மறுசீரமைப்புப் பணியில் ஈடுபடும் வெளிநாட்டு நிறுவனங்கள் அனைத்தும், உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று தீவிரவாத அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துவருகின்றனர்.

இவர்களது எச்சரிக்கையை மதிக்காத வெளிநாட்டு உறுப்பினர்களைக் கடத்தி சென்று, தலையைத் துண்டித்து வருகிறார்கள். இந்தியாவை சேர்ந்த 3 சாரதிகளை தீவிரவாதிகள் கடத்திச் சென்று மிரட்டல் விடுத்துள்ள அவர்கள், குவைத் நிறுவனத்தை ஈராக்கிலிருந்து வெளியேற்றவே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் துருக்கி நாட்டைச் சேர்ந்த 2 சாரதிகளை தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். முகமூடிஅணிந்து துப்பாக்கி ஏந்தி நிற்கும் தீவிரவாதி முன்பு, அவர்கள் உட்கார்ந்திருக்கும் வீடியோக் காட்சியை அராபியத் தொலைக்காட்சி நிறுவனமான அல்ஜசீரா வெளியிட்டுள்ளது.

கடத்தப்பட்டவர்கள் பெயர் அப்துல் ரகுமான் தாமீர், சயீத் அன்வர். ஆனால் அவ்ர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது வெளியிடப்படவில்லை. இவர்களைக் கடத்திச் சென்றது அல் கொய்டா ஆதரவு இயக்கமான அபுமுசாப் அல்சார்குவாஜி என்பது தெரியவந்துள்ளது.

துருக்கிநாட்டு நிறுவனமான காக்ரா மணலி என்ற கம்பனி - ஈராக் நாட்டிலுள்ள அமெரிக்கக் கூட்டுப்படைக்கு உதவியாக இருக்கிறது. அவர்கள் இன்னும் 48 மணி நேரத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேறாவிட்டால், கடத்தப்பட்ட 2 சாரதிகளின் தலையையும் துண்டித்துவிடுவதாகத் தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

இது தவிர குவைத் கம்பனியில் வேலை செய்து வந்த சோமாலிய நாட்டைச் சேர்ந்த சாரதி ஒருவரையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். குவைத் நிறுவனம் உடனடியாக வெளியேறாவிட்டால் சோமாலிய சாரதியையும் 48 மணி நேரத்தில் கொன்று விடுவதாக மிரட்டியுள்ளனர்.

# பங்களாதேஷில் தொடர் மழை ஒரு கோடி மக்கள் பாதிப்பு



பங்களாதேஷில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அனைத்து ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல நகரங்கள் மற்றும் கிராமங்கள் தண்ணீரில் மூழ்கிவிட்டன. டாக்கா நகருக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையும் மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. இதுவரை ஒரு கோடி மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பான இடத்திற்குச் சென்றுள்ளனர்.

பல இடங்களில் வெள்ளத்தில் சிக்கியவர்களை மீனவர்கள் படகுமூலம் மீட்டு பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். தற்போது பாதுகாப்பு முகாமில் இருப்பவர்களுக்குச் சரிவர உணவு வழங்க முடியாமல் பங்களாதேஷ் அரசு தவிக்கிறது.

ஒவ்வொரு முகாமிலும் இருக்கும் அனைவருக்கும் குறிப்பிட்ட அளவு உணவு மட்டுமே வழங்கப்படுகிறது. பல பெண்கள் முகாம்களில் தட்டுக்களை உணவுக்காக ஏந்தி நிற்கும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பத்துப் புலிகளை கைது செய்துள்ளமை புரிந்துணர்வை அர்த்தமற்றதாக்குகிறது!

## அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

(அம்பாறை)

அக்கரைப்பற்றில் விசேட அதிரடிப்படையினர் தமது உறுப்பினர்களைக் கைது செய்திருப்பது படைத் தரப்பினருக்கும் தமக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புக்கள் ஊடாக ஏற்பட்ட புரிந்துணர்வை அர்த்தமற்றதாக்கியுள்ளதாக விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை அக்கரைப்பற்றில் விசேட அதிரப்படையினர் தமிழ் இளைஞர்கள் எட்டுப் பேரைக் கைதுசெய்தனர். இவர்களிடமிருந்து இரு துப்பாக்கி ரவைகள் மற்றும் சயனைட் குப்பிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாக படையினர் அறிவித்திருந்தனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட குயிலின்பன் -

கைது செய்யப்பட்ட அனைவரும் எமது உறுப்பினர்களே. இவர்களில் மூவர் விடுமுறையில் சென்றவர்கள். ஏனைய ஐவரும் மட்டக்களப்பில் அரசியல் வேலைத்திட்டத்தில் இணைந்திருந்தவர்கள்.

விடுமுறையில் சென்ற இருவரின் உடைகள் வைக்கப்பட்ட பொதியில் துப்பாக்கி ரவைகள் இருந்ததாக அதிரடிப்படையினர் கூறியிருந்தனர். ஆனால், அவை தவறுதலாக பொதியில் இருந்தனவா அல்லது விசேட அதிரடிப்படையினர் திட்மிட்டு பொதியில் அவற்றைப் போட்டனரா என ஆராய்ந்து வருகின்றோம்.

விடுமுறையில் செல்லும் போராளிகளின் பொதிகள் சோதனை செய்து அனுபபுவதே வழக்கம். தமது பொதியில் ரவைகள் எப்படி வந்ததெனத் தெரியாதென, அவர்களை நான் பார்வையிடச் சென்றபோது தெரிவித்தனர்.

இந்த நிலையில் இந்த விடயம் குறித்து தலைமைப்பீடத்துடன் ஆராய்ந்து வருகின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி சயனைட் குப்பிகள் வைத்திருப்பது தவறல்ல. எவ்வாறு இருந்தபோதும் இவ்வாறான நிலைமைகளின் போது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முன்பே போராளிகளை படையினர் சோதனையிட முடியும் என்ற விதிமுறையையும் விசேட அதிரடிப்படையினர் மீறியுள்ளதாக குயிலின்பன் குற்றஞ்சாட்டினார்.

## அரசாங்கத்துடன் இணைவதா?

# 15 ஆம் திகதிக்குப் பின்பே தொண்டமான் தீர்மானம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இணைவது குறித்து இம்மாதம் 15 ஆம் திகதியின் பின்பே முடிவெடுப்பர் என்று அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு - நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிருபிப்பதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸை இணைப்பதற்கு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இந்த விடயம் குறித்து அரசின் முக்கியஸ்தர்கள் கட்சியின் தலைவா ஆறுமுகம் தொண்டமானுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் அரசுடன் இணைவது குறித்து ஏற்பட்டுள்ள நெருக்கடியை அடுத்து இந்தியாவின் முக்கிய சோதிடர் ஒருவருடன் அவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்த மாதம் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ள கிரகமாற்றத்தின் பின்னர் அரசியல் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் இதன்பின்னர் அரசுடன் இணைவதா இல்லையா என்பது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அரசுடன் இணைவது குறித்து, விடுதலைப் புலிகளின் விருப்பத்தை அறிந்துகொள்தற்கு முயற்சித்தபோதும் அது பலனளிக்கவில்லையென்றும், அவர்களின் விருப்பத்தை அறிந்துகொள்வதற்கு தொண்டமான் முயற்சித்து வருகின்றார் என்றும் அவர்களின் விருப்பத்தை அறிந்து கொண்ட பின்னரே அரசுடன் இணைவது குறித்து தொண்டமான் தீர்மானிப்பார் என்று அரசதரபபுத் தகவல்கள் தெரிவித்தன.

### சர்வதேச...

கீனன், ஜோன் பெக்கர் ஆகியோர் அடங்குகின்றனர்.

இலங்கையில் தங்கியுள்ள இந்த நிபுணர்கள் அரசியற்கட்சிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி செயலகமும் சர்வதேச தொடர்புகளுக்கான பண்டாரநாயக்க மத்திய நிலையமும் இணைந்து இவர்களை வரவழைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

### இராணுவக்....

திருகோணமலையைத் தலைமையகமாகக் கொண்ட 22ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் யாழ்.படைகளின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அதேவேளை, யாழ் படைகளின் பிரதிக் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் எஸ்.குலதுங்க, திருகோணமலை 22 ஆவது டிவிசனின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வன்னிப் படைகளின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் டி.எஸ்.கே.விஜேசூரிய, இராணுவத் தலைமையகத்தில் அதிகாரிகளுக்கான பொதுக்கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### இரு இராணுவப்....

இந்தச் சம்பவத்தின்போது இவர்களுக்குத் துணையாகச் செயற்பட்ட குணபண்டா சின்னவன் என்பவரும், எஸ்.எல்.ஆர். துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

### இரண்டாவது..

பேரும் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக வண.பிதா. கருணாரட்ணம், உபதலைவராக சிவபாலன, செயலாளராக மாலதி, பொருளாளராக கஜேந்திரன் ஆகியோர் தெரிவாகினர்.

இந்தக் கூட்டத்துக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், திருமலையில் சட்டத்தரணியாகவுள்ள சிவபாலன்,

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி டொக்டர் சிவபாலன், யாழ். பல்கலைக்கழக நூலக வியலாளர் செல்வி அருளானந்தம், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, வன்னியன் சட்டக்கல்லூரி பொறுபபாளர் அச்சுதன், நியுஸிலாந்திலுள்ள மனித உரிமை நடவடிக்கையாளர் மாலதி, பாரிஸிலுள்ள மனிதஉரிமை தமிழ் நிலையத்தின் மைக்கனல், கிருபா

## அக்கரைப்பற்றில் கைதான

# 10 தமிழ் இளைஞர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு!

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 10 தமிழ் இளைஞர்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல் அக்கரைப்பற்று விசேட அதிரடிப் படைச் சோதனை முகாமில் வைத்து இந்தப் பத்து இளைஞர்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணம் செய்த வாகனத்தை விசேட அதிரடிப்படையினர் சோதனையிட்டபோது, துப்பாக்கி ரவைகள் இரண்டும், சயனைட் குப்பிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து இவர்களைக் கைது செய்த அதிரடிப்படையினர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இவர்களைப் பொலிஸார் அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தபோது நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## இந்தியப் படையால் கொல்லப்பட்ட

# 63 பொது மக்களின் நினைவு நாள் இன்று!

வல்வெட்டித்துறையில் 1989 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 63 பொதுமக்களுக்குமான நினைவுத்தூபி ஒன்று இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நினைவாகத் திறந்து வைக்கப்படவுள்ள இந்தத் தூபி, தீருவில் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இந்த நினைவுத்தூபி திறப்பு விழாவையொட்டி, படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நினைவாக

டச் சுற்றுப்போட்டியின் இறுதி நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, கடற்புலிகளின் மகளிர் அணித் தளபதி மதிவதனி ஆகியோரும், சிறப்பு விருந்தினராக வல்வைப் படுகொலைச் சம்பவத்தில் படுகாயமடைந்தவரான கோ. கருணானந்தராசா மற்றும் தி.கனக சபாபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## புலிகளின் குரலின் முத்தமிழ் கலையரங்கு

(வடமராட்சி)

புலிகளின் குரல் வானொலியின் வடமராட்சி கிழக்கில் மாதாந்த முத்தமிழ் கலையரங்க நிகழ்வு இன்று மாலை 7.30 மணியளவில் பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலைநிகழ்வுகளுட[illegible] மலைமகள் எழுதிய புதிய க[illegible] கள் நூல் அறிமுக விழாவும் [illegible] பெறுமென ஏற்பாட்டாளர்க[illegible] வித்தனர்.

## செல் காஸ் வி[illegible] 70 ரூபாவால் உயர்[illegible]

(கொழும்பு)

வீட்டுப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் செல் காஸின் விலை நேற்று நள்ளிரவு முதல் 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதென, செல்காஸ் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் சந்தையில் தற்போது 620 ரூபாவாக விற்கப்படும் செல் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 690 ரூபாவாக அதிகரிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செல் காஸின் விலையை கடந்த ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டபோதிலும் அரசாங்கம் வழங்கிய சில சலுகைகளால் அந்த விலை உயர்வு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் தற்போது அரசு வ[illegible] வந்த நிவாரணம் நிறுத்தப்ப[illegible]ளதை அடுத்து இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக செல் காஸ் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

## மத்திய கல்லூரிக்கு இன்று விடுமுறை

(யாழ்ப்பாணம்)

அதிகாரியான மேஜர் ஜெனரல் டி.எஸ்.கே.விஜேசூரிய, இராணுவத் தலைமையகத்தில் அதிகாரிகளுக்கான பொதுக்கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தற்போது இந்தப் பதவியை வகிக்கும் மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க வன்னிப்படைகளுக்கான கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கைகள் பணிப்பாளராக இருக்கும் பிரிகேடியர் நிமால ஜெயசூரிய, யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள 52 ஆவது டிவிசனின் பொதுக்கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தற்போது 52 ஆவது டிவிசனின் பொதுக்கட்டளை அதிகாரியாகவுள்ள பிரிகேடியர் ரி.டபிள்யூ.ஜெயவர்த்தன நியமனம் இராணுவ நலன் காப்புப் பிரிவுக்கு மாற்றப்படவுள்ளார்.

இராணுவ நலன்காப்புப் பணிப்பாளராக பதவி வகிக்கும் பிரிகேடியர் பி.எல்.எம்.அலுவிகார கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பளம் மற்றும் பிரிவுகள் பணிப்பாளராக இருக்கும் பிரிகேடியர் ஆர்.கே.பி.ரணவீர, யாழ். படைகளின் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

யாழ்.படைகளின் தலைமையகத்தில் பணியாற்றும் பிரிகேடியர் எச்.எல்.வீரதுங்க சம்பளம் மற்றும் பிரிவுகளுக்கான பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நடவடிக்கை இயக்குநராக பிரிகேடியர் ஏ.டபிள்யு.ஜே.சி. டி சில்வா பொறுப்பேற்கவுள்ளார் எனவும் இராணுவத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

னியன் சட்டக்கல்லூரி பொறுபபாளர் அச்சுதன், நியுஸிலாந்திலுள்ள மனித உரிமை நடவடிக்கையாளர் மாலதி, பாரிஸிலுள்ள மனிதஉரிமை தமிழ் நிலையத்தின் மைக்கனல், கிருபாகரன் சட்டத்தரணி (அவுஸ் ரேலியா) பிரதீப், அன்னா பரராஜசிங்கம் (அவுஸ்ரேலியா) ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தமிழ்....

மிய சமூக பண்பாட்டு உரிமைகளுக்கான சாசனத்தின் கீழ் தமக்கான உரிமைகளைப் பேணுவதற்காக தம்மைத் தாமே ஆளும் நிர்வாக அமைப்பை உடனடியாகவே பெறுவதற்கான உரிமைகளைக் கொண்டவர்கள்.

அத்துடன், இன்றைய சூழலில் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பைப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டவர்கள்.

ஐ.நா. மனிதஉரிமை ஆணைக்குழுவின் கீழ் செயற்படும் இந்த உப ஆணைக்குழு உடனடியாகவே இந்த வேண்டுதலை பரிசீலித்து இது தொடர்பான பரிந்துரையை ஐ.நாவிற்கு வழங்கவேண்டும என உலகத் தமிழர் கூட்டமைப்பு கோரியுள்ளது.

1975 இல் கையொப்பமிடப்பட்டு, 1997 இல் இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துலக பொருண்மிய சமூக பண்பாட்டு உடன்படிக்கையின் முதலாவது பிரிவு, மக்கள் பொருண்மிய சமூகப் பண்பாடடு மற்றும் கலாசார உரிமைகளைக் கொண்டவர்கள் என்பதையும் அதனை அவர்கள் பெறுவதற்கும் பிரயோகிப்பதற்கும் எதுவித தடையையும் எவரும் விதிக்க முடியாது என்பதையும் இந்த ஆவணம் சுட்டிக் காட்டியுள்ளது.

மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இந்த நினைவுத்தூபி திறப்பு விழாவையொட்டி, படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நினைவாக வல்வை விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்

## இராணுவத்துக்கு....

விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுகிறது.

எவ்வாறாயினும் இக்கொலையை யார் புரிந்தார்கள் என்பதைக் கண்டறியும் பொருட்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

இதேவேளை - கொலை செய்யப்பட்ட புளொட் மோகன் என்பவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாக, மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா நேற்று முன்தினமே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆகியோரும், சிறப்பு விருந்தினராக வல்வைப் படுகொலைச் சம்பவத்தில் படுகாயமடைந்தவரான கோ. கருணானந்தராசா மற்றும் தி.கனக சபாபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## எச்.என்.டி.ஏ.....

தத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் - எச்.என்.டி.ஏ., எச்.என்.டி.எம், எச்.என்.டி.சி.எம். ஆகியவை பட்டத்திற்குச் சமமான சான்றிதழ்களாகக் கொள்ளப்பட்டன.

அவ்வாறே இதுவரை காலமும் அரச நியமனங்களும் வழங்கப்பட்டு வந்த போதிலும், இந்தமுறை பட்டதாரிகளை அரச துறைகளில் வேலைக்காக இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்தே இந்த அடையாள உண்ணாவிரத மற்றும் மறியல் போராட்டத்தினை யாழ். செயலகம் முன் மேற்கொள்ளவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்கள்.


# Tractor விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மகேந்திரா 575 - DI Tractor with Trailor உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு T.P : 021-2225780
0777-325545

(C/2798)


லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

## மத்திய கல்லூரிக்கு இன்று விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரிக்கு இன்று விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு தினம் நேற்று நடைபெற்றமையாலேயே இன்று விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், நாளைமுதல் பாடசாலை வழமைபோல் செயற்படும் எனவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

## 17 தமிழ் அகதிகள் மணல்திட்டில் மீட்பு!

(மன்னார்)

தமிழகம் அகதிமுகாமில் தங்கியிருந்த ஈழத்தமிழ் அகதிகளில் 17 பேர் தலைமன்னாருக்கு படகில் வந்தவேளை, தலைமன்னார் அருகேயுள்ள உறுமலை கடற்பகுதியிலுள்ள மணல்திட்டியில் இறக்கிவிடப்பட்ட நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டதாக படைத் தலைமையகம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் வந்த இந்த 17 பேரில் 6 ஆண்கள், 11 பெண்கள் மற்றும் ஒரு சிறுவன் ஆகியோர் அடங்குவதாகவும், இவர்கள் அனைவரும் ஒருவருக்கு இந்திய மதிப்பில் 2500 செலுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் கடற்படையினரால் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.